விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 25 புதன்கிழமை (09.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சபாநாயகருக்கு த.தே.கூ கடிதம்

பிரதமநீதியரசருக்குஎதிராககுற்றப்பிரேரணை குறித்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதமொன்றை நேற்று செவ்வாய்க்கிழமை கையளித்துள்ளது.

அந்தக் கடிதத்தின் முழு விபரம் வருமாறு,

கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது பிரதம நீதியரசருக்கு எதரா‌ன குற்றப் பிரேரணை எதிர்வரும்10-ம், 11-ம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமென எடுத்த தீர்மானத்தை எதிர்த்து நாம் இதை எழுதுகின்றோம்.

சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க மற்றும் நீதியரசர் அமரதுங்கவின் தீர்ப்பு ஆகியவை நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை தெளிவாகக் கூறியுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

யாழில் சீரற்ற காலநிலை

# ஜனாதிபதியின் யாழ். விஜயம் ரத்து நிகழ்வுகளும் பிற்போடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த பல நிகழ்வுகள் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகவே ஜனாதிபதியின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள் விஜயமாக எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் ஜனாதிபதி 14ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தர மாட்டார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இதனால் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மறு அறிவித்தல் வரும்வரை பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்ட யாழ்.மாவட்ட செயலக முகாமைத்துவ மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத் திறப்பு (19ஆம் பக்கம் பார்க்க)

# திவிநெகும சட்டமூலம் மன்றில் நிறைவேற்றம்

## ஆதரவாக 160; எதிராக 53 வாக்குகள்

(கொழும்பு), பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சட்டமூலத்திற்கு எதிராக ஐ.தே.க, த.தே.கூ, ஜேவி.பி ஆகியன வாக்களித்தன. (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நேற்று கடும் மழை

யாழ்.குடாநாட்டில் நேற்று கடும் மழை பெய்ததோடு கடலும் கொந்தளிப்புடன் காணப்பட்டது.

வீதியோரமாக வெட்டப்பட்ட குழிகள் மழை வெள்ளத்தில் நிரம்பிக் காணப்படுகின்றன.

இதைவிட வீதிகளில் சிறுசிறு விபத்துகளும் அதிகளவில் இடம்பெற்றன.

வீதி புனரமைப்பு பணிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் மற்றும் வீதியில் ஏற்பட்டுள்ள குழிகளில் தேங்கிநின்ற வெள் ளத்தினாலும் பயணிகள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

இதேவேளை, விவசாய நிலங்கள் குறிப்பாக வயல் நிலங்கள் மழை வெள்ளத்தில் நிரம்பி வழிந்தன. சுமார் ஒரு வாரத்திற்கு பின்பு நேற்று கடும்மழை பெய்ய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பிரதம நீதியரசரை பதவி நீக்கும் அதிகாரம் எனக்கே உண்டு-ஜனாதிபதி



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கே காணப்படுகின்றது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வு காண்பதே எனது நோக்கம். அரசியல் அமைப்பில் ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்களின் அடிப்படையில் நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைத்து விவாதம் நடத்தவேண்டிய (02ஆம் பக்கம் பார்க்க)

## நீதியரசர்களுக்கு அச்சுறுத்தல் சந்தேக நபர்களைத் தேடி வலைவீச்சு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களை விசாரித்த மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவில் அங்கம் வகித்த அனில் குணரத்தன மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பொரளை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டது.

அத்துடன் மேற்படி அச்சுறுத்தல் அழைப்புகள் விடுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் தொடர்பான விபரங்களை பொலிஸாருக்கு கையளிக்குமாறு தொலைபேசி இணைப்பு நிறுவனங்களுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ -11)

## அவசர கூட்டத்துக்கு சபாநாயகருக்கு அழைப்பு

•பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றை மற்றுமொருமுறை கூட்டுமாறு எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## முதியவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள கிணறொன்றில் இருந்து முதியவரின் சடலம் யாழ்.பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நல்லூர் செட்டித்தெரு பகுதியை சேர்ந்த கணபதிப்பிள்ளை (02ஆம் பக்கம் பார்க்க)

## 5 வான் கதவுகள் மீண்டும் திறப்பு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுப் பெய்த கடும் மழையை அடுத்து இரணைமடுக்குளத்தினுள் நீர்வரத்து அதிகமாகக் காணப்படுவதால் மீண்டும் 5 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகம் மீள ஆரம்பம்; மாணவர்கள் செல்வதில் தாமதம்

## விரிவுரைகள் நேற்று நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களின் பின்னர் யாழ்.பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் நேற்றையதினம் மீள ஆரம்பிக்கப்பட்டபோதிலும் மிகக் குறைந்தளவிலான மாணவர்களே சென்றனர்.

இதனால் விரிவுரைகள் எவையும் நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டது.

மிகக் குறைந்தளவிலான மாணவர்கள் வருகைதந்திருந்த போதிலும் சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர்களும் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறியதை அவதானிக்க முடிந்தது.

40 நாட்களுக்கு மேலாக செயலிழந்து காணப்பட்ட யாழ்.பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது என நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் பல்கலைக்கழக அனைத்து பீடாதிபதிகள் மற்றும் மாணவத் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யா/கனகரத்தினம் ம.ம.வி மாணவர் விடுதி

தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான இருபாலாருக்கு மான விடுதிகள் இயங்குகின்றன. சேரவிரும்பும் மாணவர்கள் அலுவலகத் தில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும்.

விடுதிக்காப்பாளர் (ஆண்), சமையலாளர் (ஆண் / பெண்) வெற்றிடங்கள் உள்ளன. அனுபவம், தகைமை உடையோர் உடன் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(சீ-2080) அதிபர்



சதுரஅடி 30/= 35/= 40/=



மிகத் துல்லியமான,உயர் தரத்திலான

6 கலரில்

டிஜிற்றல் பனர் பிரின்டிங்



டிஜிற்றல் பனர்,டிஜிற்றல ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள்,முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனா டிஜிற்றல் பிரின்டிங்

JANA DIGITAL PRINTING


மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

இல 04, மணிக்கூட்டு வீதி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P077 0731654

E-MAIL; JANADIGITALPRINTING@YAHOO.COM


# மரண அறிவித்தல்



## அருணாச்சலம் திருநாவுக்கரசு

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட அருணாச்சலம் திருநாவுக்கரசு 07.01.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம்-முத் துப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும் காலஞ் சென்றவர்களான யோகம்மா, அரியமலர் ஆகியோரின் சகோ தரரும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான ஐயம்பிள்ளை, முருகேசு, சுபத்திரை, கனகரத்தி னம், பூமணி, பூராசா மற்றும் இரத்தினம் தணிகாசலம் ஆகி யோரின் மைத்துனரும் இரகுபதியின் சித்தப்பாவும் புன ரஜனியின் மாமனாரும் சாரங்கி, ஜெனங்கி, பைரவி, ராகவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2013 வியாழக் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

541/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர், 021 222 0036

(1437)

தகவல் :
மனைவி


பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

40% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

(சீ 1976) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## முதிய...

ஜெகசோதி (வயது 71) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதிய வீர் நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள தமது காணியை தினமும் சென்று பார்த்து வருபவர் எனவும்,

வழமைபோல நேற்று மாலை 3.00 மணிக்கு காணியினை பார்க்கச் சென்ற வரை காணவில்லை என உறவினர்கள் தேடிய போது அவர் கிணற்றில் சடலமாக காணப் பட்டதாக உறவினர் கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத் திற்கு சென்ற யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் திருநாவுக் கரசு, குறித்த முதி யவரின் மரணத்தில் சந்தேகம் இருப்ப தாகக் கூறி சடலத் தினை பிரேத பரி சோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சடலத் தின் அருகில் இரு ந்த நஞ்சுப் போத் தல் ஒன்றும் பொலி ஸாரினால் [illegible]கப் பட்டு[illegible] [illegible]

## பிரதம நீதியரசரை...

அவசியம் இல்லை. இடதுசாரிக் கட்சிகள் ஆளும் கட்சியில் அங்கம்வகித்துவருகின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் எனது நம்பிக்கைக்கு பாத்திரமாக அவர்கள் செயற்படு வார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி காலையில் ஒரு கதையும் மாலையில் மற்றொரு கதையும் சொல்லும் ஆனால் எங்களால் அப்படி செய்யமுடியாது. நாங்கள் சொல்வதை செய்வோம். செய்வதைச் சொல்வோம்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற சுவர்ண புறவர விருதுவழங்கல் விழாவின்போது உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பொதுமக்கள் ஒரு போதும் மக்கள் பிரதிநிதிகளுக்காக இல்லை. மக்கள் பிரதிநிதிகளே பொதுமக்களுக்காக உள்ளனர் என்றும் கூறினார்.(எ)


Angel International School: A School of excellence

## ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் சிறப்பம்சங்கள்

Exam Results: பரீட்சைப் பெறுபேறுகள் (Cambridge & Srilankan O/L &A/L)
X-tra Activities: விளையாட்டு, தொழில்நுட்பம், இசை, நாடகம், விவாதம்.
Character Formation: நற்பண்புகளை உருவாக்குதல்.
English Communication: ஆங்கிலப் பேச்சுத்திறமை.
Leadership Development: தலைமைத்துவ அபிவிருத்தி

800 மாணவர்களைக் கொண்டு தமிழ்ப் பிரதேசங்களிலேயே மிகப் பெரிய பாடசாலையாகத் திகழ்கின்ற இப் பாடசாலையில் உங்கள் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம்.

3+, 4+, 5+ மற்றும் தரம் 1 6 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கான அனுமதிகள் தற்போது எமது மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் வழங்கப்படுகின்றன.



ஆங்கிலத்தில் திறமை குறைந்த மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் வழங்கப்படுகின்றன.

தூர இடங்களில் இருந்து (சுண்டிக்குழி, ஊரெழு, சுழிபுரம்) இப்பாடசாலைக்கு போக்குவரத்து வசதிகளும் உண்டு.

ஆங்கிலத்தில் புலமையுள்ள, அனுபவம் வாய்ந்த தேர்ச்சி மிக்க ஆசிரியர் கள் தேவைப்படுகின்றனர்.

விசேடமாக உயர்தர கணிதம் மற்றும் ஜேர்மன் மொழி பாடங்கள் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

"இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டு 10.01.2013 முற்பகல் 10.00மணிக்கு திறக்கப்படவுள்ள எமது யாழ்ப்பாண பாடசாலையின் புதிய கட்டடதிறப்பு விழாவிற்கு அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்."



e-mail : angelism2006@gmail.com
website: www.ais-manipay.org
contact: 021 225 5268 / 077 72 38 300


# கண்ணீர் அஞ்சலி

## செல்வி சண்முகநாதன் யோகநாயகி



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தி யோகத்தராக கடமையாற்றிய செல்வி சண்முகநாதன் யோகநாயகி அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தோற்றம் : 18.11.1969
மறைவு : 08.01.2013

சமுர்த்தி முகாமையாளர்களும் அபிவிருத்தி உத்தி யோகத்தர்களும், பிரதேச செயலகம் தெல்லிப்பழை

# கண்ணீர் அஞ்சலி



## சின்னட்டி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)

ஊர்காவற்றுறை தபாலக தபால திபராகக் கடமையாற்றும் தி.ஆதவன் அவர்களின் அன்புத் தந்தை சின்னட்டி திருநாவுக்கரசு அவர்களின் மறைவை இட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

சக ஊழியர்கள்,
(1430) உபதபால் அதிபர்கள், ஊர்காவற்றுறை தபாலகம்


செல்லா சினிமா யாழ்ப்பாணம்




விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்

விரைவில்

அலெக்ஸ்பாண்டியன் 10.30, 2.30, 6.30, 9.30

YAALH ENGLISH ACADEMY

COURSES: Basic/Intermediate/Advanced

ஆசிரியர் : ச.முத்துலிங்கம் 773 212 711


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கதைத்து முடிந்ததும் நான் அவரைப் பார்த்து, ''இப்போது தொலைபேசியில் கதைத்த இலக்கம் என்ன?'' என்று கேட்டேன்.

அவர் தலையை சொறிந்து கொண்டு ஞாபகம் வரவில்லை என்றார்.

''சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

''மாலதி'' என்று கூறினார்.

''என்ன சேர் இது வேடிக்கை... சற்று நேரத்திற்கு முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கம் மறந்து விட்டதாக கூறினீர்கள். எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயரை மறக்கவில்லை. அதை சரியாகச் சொல்லி விட்டீர்கள்'' என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார். அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் பிழையில்லை. ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே!

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசியில் கதைக்கிறோம். அதன்பின் கிடைக்கப் பெற வேண்டிய காரியம் முடிந்தவுடன் அந்த இலக்கம் நமக்கு அநாவசியமாகி விடும். அதனாலே மறந்து விடுகிறோம்.

இதற்குப் பெயர் தான் "தற்காலிக 'ஞாபகம்" ஆகும். அதற்காக மனைவியினுடைய பெயரை மறக்க முடியுமா... அதை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்... அதனாலே மறப்பது கடினமாக இருக்கும்.

இதற்குப் பெயர்தான் "நிரந்தர ஞாபகம்"

தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும். நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து விடும்.

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலேயே... ஒன்று மறைந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் ''தொண்டையிலே இருக்கிறது... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது'' என்று கூறுவார்கள்.

ஒருவருக்கு எந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறதோ அதில் ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொலைபேசி நிலையத்தில் வேலை செய்பவருக்கு இலக்கங்கள் எல்லாம் நல்ல ஞாபகமாக இருக்கும்.

அதுமாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நல்ல ஞாபகமாக இருக்கும்.

ஒரு மூளை... எண்களை விட, எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருக்கும். உதாரணமாக, ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால், அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். மூளையைத் பொறுத்த வரைக்கும் ஞாபகசக்தி அதிகம் உள்ள மூளை; மறதியுள்ள மூளை அப்படியென்று ஒன்றும் கிடையாது. நினைவு வைத்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று சொல்லலாமா?

அதனாலே ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கிற ஒருவகைப் பயிற்சி– எமது முயற்சியைப் பொறுத்துத் தான் அமையும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கடந்த வருடம் இடம்பெற்ற தாய்–சேய் மரணங்கள் தொடர்பில் விசாரணை

## யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மரணங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற 14 தாய்,சேய் மரணங்கள் குறித்து யா[illegible]வட்ட திடீர் மரண விசாரணை[illegible]திகாரி எம்.உதயசிறியால் யாழ்.நீதவான் நீதிமன்றில் பொதுநல வழக்கு ஒன்று கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் கடந்த வருடம் அதாவது 2012 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற 14 தாய், சேய் மரணங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மரணங்கள் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் என்ற வகையில் விசாரணைகள் ஏதாவது மேற்கொள்ளப்பட்டதா எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் இடம் பெற்ற 14 தாய்,சேய் மரணங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி வழக்குத் தாக்கல் செய்ததனால் மட்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இங்கு எந்த மரணங்கள் இடம் பெற்றாலும் அது தொடர்பில் ஒவ்வொரு மாதமும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளினால் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

விபத்தின் போது உயிரிழந்தவராக இருந்தாலும் சரி, வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தாலும் சரி விசாரணைகள் இடம்பெறும்.

அதேபோன்று கடந்த வருடம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற தாய்,சேய் மரணங்கள் தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

இதேவேளை,திடீர்மரண விசாரணைகள் அதிகாரியினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரச வைத்தியசாலைக்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு செல்லும்போது நோயாளியை பொறுமையோடும் அக்கறையோடும் பரிசோதிப்பதில்லை. நோயை நிர்ணயம் செய்யாமலேயே மருந்தை கொடுத்து விடுகின்றனர்.

இதன் காரணமாகவும் மரணங்கள் சம்பவிக்கின்றது எனவும் பெரும்பாலான வைத்திய நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணம் செலுத்தி காட்டுகின்ற நோயாளர்களையே அரச வைத்தியசாலைகளில் பார்வையிடுகின்றனர் எனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளில் மகப்பேற்று நிபுணர்கள் பிரசவங்கள் பார்ப்பதில்லை என்றும் அங்குள்ள விடுதி வைத்தியர்களினாலேயே பிரசவங்கள் பார்க்கப்படுவதாகவும் அதன் காரணமாகவும் தாய், சேய் மரணங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றது எனவும் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.(அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 150 | 140 | 130 |
| உருளைக்கிழங்கு | 80 | 60-80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80-120 | 100 | 140 | 120 |
| தக்காளி. | 60 | 100 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 70 |
| கரட் | 100 | 80 | 120 | 130 |
| பூசணி | 30-40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80-130 | 120 | 150-170 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 60-80 | 70 | 80 |
| பாகற்காய் | 130 | 160 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 140 | 170 | 140 | 140 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | -- | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 250 | 180 | 170 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 800 | -- |
| போஞ்சி | 120 | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 30-40 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 150 | 120 | 150 |
| வெங்காயப்பூ | -- | 250 | 60 | 80 |

# இராசி பலன்

*09.01.2013*
*(மார்கழி 25, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு*
*துவாதசி காலை 8.44 மணிவரை*
*திரயோதசி பின்னிரவு 6.23 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 3.21 மணிவரை*
*இராகு காலம் 12.33-2.03 மணிவரை*
*சுபநேரம் 5.03-6.33 மணிவரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அலைய நேரிடலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**இடபம்** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், விலகியவர்கள் விரும்பி வந்து இணைவர், புதிய திட்டங்கள் கைகூடும், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணி புரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலில் புதிய முதலீடுகள் செய்வது பற்றிய எண்ணம் தோன்றும்.

**சிங்கம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறக்க முடியாத சில சம்பவங்கள் இடம் பெறலாம், தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக இடம் பெறலாம்.

**துலாம்** புதிய பாதை புலப்படும் நாள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, இல்லத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**மகரம்** பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், என்றோ நடக்குமென நினைத்த காரியமொன்று இன்று நடைபெறலாம், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகாயமடைந்திருந்தவர்களை வேடிக்கை பார்த்த சனக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மானிப்பாய் வீதி நாலுகால் மடச்சந்தியில் இடம்பெற்றுள்ளது.


இதில் வண்ணார்பண்ணை பொன்னையா லேன் பகுதியில் வசிப்பவரும் இரு பிள்ளைகளின் தந்தையாருமான வல்லிபுரம் அம்பிகாவதி (வயது 45) என்ற குடும்பஸ்தரும் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞனொருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குடும்பஸ்தர் மானிப்பாய் வீதியினை சைக்கிளில் கடக்க முற்பட்டபோது மானிப்பாயிலிருந்து யாழ்.நோக்கி வேகமாக வந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் துவிக் கரவண்டியில் சென்ற குடும்பஸ்தர் மீது வேகமாக மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞரும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தரும் படுகாயமடைந்த நிலையில் அவ்வீதியில் இருந்துள்ளனர். அங்கு வந்திருந்த இளைஞர்கள் உட்பட அனைவரும் படுகாயமடைந்தவர்களினை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனரே தவிர அவர்களினை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான எவ்வித நடவடிக்கையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை.

எனினும் அரை மணி நேரத்தின் பின்னர் அங்கு வந்த ஆறுகால்மடத்தைச் சேர்ந்த இளைஞனொருவரால் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு வேடிக்கை பார்ப்பதற்காக கூடியிருந்த ஏனையோர் இவ்வாறான விபத்தில் காயமடைந்தவர்களினை வாகனங்களில் ஏற்றி சென்றால் சட்டச் சிக்கலினை எதிர்நோக்க வேண்டிவரும் என ஏனையோருக்கு சட்டம் கற்பித்தனர்.

எனினும் பொலிஸார் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு மனிதாபிமான விதத்தில் உதவுதல் வேண்டும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)




# யாழ்.மாநகர சபை கட்டிடத்திற்கு இவ்வருடம் அத்திபாரமிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் கட்டடத்திற்கு அத்திபாரம் இந்த வருடம் இடப்படும் என யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட காலமாக யாழ். மாநகர சபையின் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கையினை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள யாழ். மாநகர சபையின் வளாகத்தினுள் இந்த வருடம் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

முழுமையாக கட்டடம் அமைக்கப்பட முடியாமல் போனாலும் அத்திபாரமாவது இடப்படும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தக் கட்டடம் அரசாங்க நிதியில்த்தான் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணம் பொது நூலகம் சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் இதன்போது நூலகத்திற்கு புதிதாக வெள்ளையடிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நூலகத்தின் சிறுவர் பகுதி மற்றும் கணனிப் பகுதி என்பன புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய பகுதிகளும் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். நூலக புனரமைப்புக்கென வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி 10 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைவிட நூலகத்திற்கு அருகில் புல்லுக் குளத்திற்கு முன்பாகவுள்ள வெற்றுக் காணியில் இந்திய அரசாங்கத்தின் 1200 மில்லியன் ரூபா செலவில் 5 மாடிகளைக் கொண்ட கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த ஆண்டு குறித்த கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கூறுவிலை மடங்களை கையகப்படுத்தும் முயற்சி தற்காலிக இடைநிறுத்தம்

## நிரந்தரமாக இடைநிறுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களில் அமைந்துள்ள கூறுவிலை மடங்களினை பிரதேச, நகர சபைகள் கையப்படுத்தும் முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


எனினும் இக் கையகப்படுத்தும் திட்டத்தினை முற்றாக கைவிடுமாறும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு கீழ் உள்ள 14 சங்கங்களுக்கு ஜப்பான் நாடு கூறுவிலை மடங்களினை அமைத்துக் கொடுத்திருந்தது.

இக் கூறுவிலை மடங்கள் சமாசத்தின் நிர்வாகத்தினருக்கு கீழ் இயங்கி வந்ததோடு அதன் வருமானமும் சமாசத்திற்கே சென்றது. எனினும் இக் கூறுவிலை மடங்களை அவை அமைந்துள்ள பிரதேச, நகர சபைகள் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சித்திருந்தன.

இதற்கு வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த திட்டம் தற்போதைக்கு கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மீனவர்களின் நலன் கருதி குறித்த திட்டத்தினை கைவிடுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இது தொடர்பில் பிரதேச, நகர சபைகள் கருத்துக்கள் எதனையும் நேற்று வரை வெளியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)




# சிரமதானத்தில் ஈடுபட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்குவதில் முறைகேடு

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் கோட்டைக்காடு மல்லாகம் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்களுக்கான உலர் உணவு கொடுப்பனவுகளில் முறைகேடுகள் இடம்பெறுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

டெங்கு ஒழிப்பை முன்னிட்டும் கிராமத்தை சுத்தமாக வைத்திருப்பதை முன்னிட்டும் அப்பிரதேச கிராம சேவகரால் வீதியில் உள்ள பற்றைகள், புற்கள் என்பவற்றை துப்புரவாக்கும் பணியில் மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு பணியில் ஈடுபடுபவர்களுக்கு குறிப்பிட்ட தொகை உலர் உணவு வகைகள் வழங்கப்படும் என குறிப்பிட்டனர்.

எனினும் வேலைகள் யாவும் முடிவடைந்த பின்னர் மேற்குறிப்பிட்ட அளவில் உலர் உணவு வகைகள் வழங்கப்படவில்லை எனவும் தம் வறுமை நிலையிலேயே மேற்படி வேலைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

எதற்காக இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபடுகின்றனர் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் பெற்றுக் கொண்ட பொருட்களுக்கான பற்றுச்சீட்டினை பலநோக்கு [illegible]றவு சங்க முகாமையாளரிடம் மக்க[illegible] போது அவர் அதை கொடுக்க மறுத்த[illegible] கொடுக்க வேண்டாம் என தனக்கு மேலிடத்தில் இருந்து உத்தரவு பிறப்பித்ததாகவும் தெரிவித்தார்.

இதனால் மக்களுக்கும் முகாமையாளருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. உரிய அதிகாரிகள் இவ்விடத்தில் கவனமெடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-85)

# யாழ்.மாநகர சபையின் கீதம் புதுப்பொலிவுடன் அமையும்!

## முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா

(யாழ்ப்பாணம்)

மதம், மொழி, வரலாற்றை மாற்றுவது எமது நோக்கமல்ல என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் மன்ற கீதத்தை மீள்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த மன்ற கீதத்தை மீள்பதிவு செய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மன்ற கீதத்தை மீள்பதிவு செய்வதற்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

அத்தோடு மதம், மொழி, வரலாற்றை மாற்றும் நோக்குடன் மன்ற கீதத்தை மீள்பதிவு செய்ய நாம் முற்படவில்லை. எல்லோரும் இணைந்து பாடக்கூடிய வகையில் தெளிவான வசனத்தில் நேரத்தை குறைத்து சகல இசைக் கருவிகளையும் பயன்படுத்தி மன்ற கீதத்தை மீள்பதிவு செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வாழ்வகத்தில் பரிசுத்தினம்

சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுநர் உதய நாளும் பரிசுத்தினமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியிலமைந்துள்ள வாழ்வகத்தில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவ கலாநிதி நளாயினி ஜெகதீசன், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்க தலைவர் இ.ஜெயசேகரன், விவசாயத் திணைக்கள ஓய்வு நிலை உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/வயாவிளான் மத்திய மத்திய மகா வித்தியாலயம் தரம் I ஏபி பாடசாலையினது அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இதற்கு இலங்கை அதிபர் சேவை தரம்I, 2-I சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு யாழ் மவட்டத்திற்குட்பட்ட வலயங்களை சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். அதிபர் சேவை தரம்I, 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் வலிகாமம் வலயத்தினை சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-II ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மாதிரி விண்ணப்ப படிவத்தை மாகாணக்கல்வி திணைக்களத்தில் பார்வையிட்டு, அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக்கல்வி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.இல் 3 பேருக்கு டெங்கு; மூன்று வயதுக் குழந்தை பலி

## விழிப்பாக இருக்க அறிவுறுத்தல்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் டெங்கு அபாயம் மீள ஆரம்பித்துள்ளமையினால் பொதுமக்கள் பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியும் வவுனியா மாவட்ட தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரியுமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியாவில் கடந்த வருடம் 82 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியதாக முறைப்பாடு கிடைத்த நிலையில் 72 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டனர். இருப்பினும் இறப்பு எதுவும் இடம்பெறவில்லை.

இவ் ஆண்டு இதுவரை 3 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகிய நிலையில் வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த 3 வயது குழந்தை பலியாகியுள்ளது. எனவே, டெங்கு தாக்கம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளமையினால் பொதுமக்கள் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக நீர் தேங்கி நிற்கும் இடங்களை முற்றாக நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் குப்பைகளை நிலத்தில் வெட்டி புதைத்தல் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் குப்பை அள்ளும் வாகனங்களில் இடுதல் வேண்டும் என்பதுடன் நீர் தாங்கிகளின் மூலமாகவும் நுளம்பு பெருக்கம் ஏற்படுவதனால் அவற்றை 5 நாட்களுக்கு ஒரு முறை முழுமையாக துப்புரவு செய்ய வேண்டும். மேலதிக நீர் வெளியேறும் குழாயையும் துணிகளினால் மூடிவைப்பதுடன் குளோரின் போட்டு நீர்த்தாங்கிகளை துப்புரவு செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, காய்ச்சல் ஏற்படும் போது தகுதியான வைத்தியரையோ அல்லது அரச வைத்தியசாலையையோ நாட வேண்டுமெனவும் தெரிவித்தார். (அ-9-266)

# கண்டி வீதியில் வாகன விபத்து; இருவர் காயமடைந்துள்ளனர்

(குருமன்காடு)

வவுனியா கண்டி வீதியில் உள்ள தேக்கவத்தை பகுதியில் நேற்றுக்காலை முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்றவர் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவது, வவுனியா நகரப் பகுதியிலிருந்து கண்டி வீதி வழியாக பயணித்த முச்சக்கர வண்டி தேக்கவத்தை பகுதியில் திடீர் என வீதியில் திரும்பிய போதுபின்னால்வந்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்துமுச்சக்கரவண்டியுடன் மோதியதோடு எதிரே வந்த துவிச்சக்கர வண்டியுடனும் மோதியது.

இதில் மோட்டார் சைக்கிள்சாரதியும்துவிச்சக்கர வண்டியில் வந்தவரும் காயங்களுக்குள்ளாகினர். காயமடைந்த தேக்கவத்தையை சேர்ந்த சுதாகர் (வயது 21), தவசிகுளத்தை சேர்ந்த டொல்சி (வயது 22) ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-9- 250)


காணி, வீடு விற்பனைக்கு

வீடு — பருத்தித்துறை வீதி, பருத்தித்துறையில் கிராமக்கோட்டுச் சந்திக்கும் தாரையடிக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

வீடு — சந்நிதி வீதி, அச்சுவேலியில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.

காணி — யாழ்ப்பாணம் அப்பலோ வைத்தியசாலைக்கும் ஆனைப் பந்திச் சந்திக்கும் இடையில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

வீடு — பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கும் வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும் இடையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

காணி — பருத்தித்துறை முதலாம் கட்டைக்கும் பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கும் இடையில் காணி விற்பனைக்குண்டு.

காணி — வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810


# இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன

## இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

இலஞ்சம் பெறுவது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் மாத்திரம் இலஞ்சம், ஊழல் பெற்றமை தொடர்பில் 3 ஆயிரத்து 163 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகம். 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் 440 முறைப்பாடுகள் கல்வித்துறை சம்பந்தப்பட்டதெனவும் பொலிஸ்துறை தொடர்பில் 318 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சி சபை தலைவர்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் 2012 ஆம் ஆண்டு 147 தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதில் 77 தேடுதல்கள் வெற்றியளித்துள்ளன.

அதன்போது 95 பேர் கைது செய்யப்பட்டதுடன் இருபது பேர் பொலிஸார் என இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்து எந்த வொரு நபரும் 1954 என்ற இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்கமுடியும் என இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-2)


Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி
உங்களுக்கு
மாதாந்த சம்பளம் : 100,000/=
மொத்த செலவு : 5 இலட்சம் மட்டுமே.
NO visa, Interview, Sponsor, Bank Balance,
FREE Visa Arrangement, Air Ticket, Sponsorships, Airport Pickup, One Week Accommodation
(HEAD OFFICE)
Call Now
Education Partner
(Reg No : PV 67191)
Bristol Business School
edutrust SINGAPORE PROVISIONAL
GREENWICH COLLEGE No : 34, Galle Road, Dehiwala, Colombo.
GREENWICH COLLEGE No :01, 2nd Lane, Power House Road, Jaffna.
தொடர்புகளுக்கு:- 021-2219787 / 0777751382 / 0773448706 / 0777630708
(அ/2076)



O/L க்கு பின்னர் உங்கள் அடுத்த இலக்கு..
Skills Training For O/L, A/L & Diploma Students
ADOA 3 in 1 Get Three Diploma Certificates in One course
ADV. DIPLOMA IN OFFICE ADMINISTRATION
Duration 4 Months
Free Course Material
ஒரே பாடநெறியில் மூன்று சான்றிதழ்கள்



கொம்ப்யூட்டர் பயிற்சிகளுக்கான நேரடி கட்டணச் சலுகை
Diploma in IT & Web Programming
Diploma in Web Design & Development
Diploma in Computer Application
Adv. Diploma in Hardware & Networking
Adv. Diploma in Java Programming
Dip. in Accounting Using Quick Books
Graphics Animation Training
- Adv. Dip. in Digital Pre-press
- Dip. in Digital Video Production
- Diploma in 2D & 3D Animation
- Master Diploma in Multimedia
(அ/2075)
CSC -ASIAN COMPUTER EDUCATION
யாழ்.நகரில் 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677
நல்லூரில் 9, குமார வீதி, T.P : 021-222 9191
சாவகச்சேரியில் கட்டுக்காணி வீதி T.P : 021-2270267
நெல்லியடியில் கொடிகாமம வீதி, T.P : 021-2262399



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>8 இல் செவ்.<br>உயரம்: 5'4"<br>தகைமை:B.A ஆசிரிய ஆலோசகர்<br>தொ.இ: B -937 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 18.75, 8இல் செவ்.<br>தகைமை:கணக்காளர் (சிங்கப்பூர்PR)<br>தொ.இ: G -957 |
| பிறப்பு: 1981 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'2"<br>கி.பா: 18, 2 இல் செவ்<br>தகைமை: Computer Engineer (UK PR)<br>தொ.இ: B -931 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>தகைமை: கணக்காளர் (சிங்கப்பூர் PR)<br>தொ.இ: G -958 |
| பிறப்பு: 1978இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 30.25, 12 இல் செவ்.<br>தகைமை: Electronic (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)<br>தொ.இ: B -933 | பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 22.25<br>தகைமை: பட்டதாரி (Bank உத்தியோகத்தர்) சிங்கப்பூர் (PR)<br>தொ.இ: G -959 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புரட்டாதி 1<br>உயரம்: 5'4"<br>தகைமை: Computer Networking (தனியார்)<br>தொ.இ: B -935 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 30.75, 2 இல் செவ்.<br>தகைமை: A/L<br>தொ.இ: G -960 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சென்னையில் ஏ.ரி.எம்.கார்ட் மோசடி; இலங்கை கும்பலுக்கு வலைவீச்சு

(கொழும்பு)

சென்னையில் போலி ஏ.ரி.எம். கார்ட் தயாரித்து பணம் திருடும் கும்பல் அதிகரித்து வருகிறது.

இந்தக் கும்பலை இலங்கையில் இருக்கும் சிலர் இயக்குவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மயிலாப்பூர், மந்தைவெளி, அடையாறு, தி.நகர், அண்ணா நகர், எழும்பூர் போன்ற பகுதிகளில் இந்த கும்பல் அதிகளவில் தமது கைவரிசையை காட்டி வருகிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஒருவர் ஏ.ரி. எம்.மையத்திற்கு சென்று பணம் எடுத்துள்ளார். அவர் வீடு போய் சேருவதற்குள் சம்பந்தப்பட்டவரின் கணக்கில் இருந்து யாரோ ஒருவர் பணம் எடுத்து அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வங்கியில் தகவல் தெரிவித்தும் அவர்கள் நம்ப மறுத்தனர். பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து நபர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் ஏ.ரி.எம் கார்ட்டுகளின் இரகசிய குறியீட்டு எண்களை இணையத்தளம் மூலம் இலங்கையிலிருந்து திருடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையில் போலி ஏ.ரி.எம் கார்ட்டுகள் தயாரிக்கப்பட்டு சென்னையில் திருட்டு நடப்பதும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், ஏ.ரி.எம்.கார்ட் வைத்திருப்போர் ஆரம்பத்தில் வாங்கிய இரகசியக் குறியீட்டு எண்களையே வைத்துள்ளனர். இந்த எண்களை அடிக்கடி மாற்றவேண்டும். மேலும் ஏ.ரி.எம். இல் பணம் எடுத்தவுடன் கடமை முடிந்துவிட்டது என கருதுகின்றனர்.

கணக்கு வைத்திருக்கும் வங்கியை தொடர்பு கொண்டு பணப் பரிவர்த்தனை குறித்து தெரிந்துகொள்ளவேண்டும். ஏ.ரி.எம். இல் பணம் எடுத்தவுடனே பற்றுச்சீட்டுகூடஎடுத்துச் செல்லாமல்பலர்வெளியேறி விடுகின் றனர்.

அடுத்து நுழைபவர்கள் எளிதில் இரகசிய எண் அறிந்து திருட்டு நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஸ்கிம்மர் கருவிமூலம் வாடிக்கையாளர்கள் தரும் கடன் அட்டைகளின் இரகசிய எண்களை இலங்கைக்கு தெரிவித்து கமிஷன் பெற்றுவந்த வாலிபர்கள் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டனர் என அவர் தெரிவித்தார். (அ-2)

## கற்கை நெறிகள் 15 இல் ஆரம்பம்

வவுனியா தொழில்நுட்பக்கல்லூரியின் இவ் ஆண்டுக்கான கற்கை நெறிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் வை.சத்தியநாதன் தெரிவித்தார்.

திணைக்கள பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய முழுநேர கற்கை நெறிகள் 15 ஆம் திகதியும் பகுதி நேர கற்கைகள் 19 ஆம் திகதியும் ஆரம்பமாவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ்வாண்டுக்கான புதிய கற்கை நெறிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் வவுனியா தொழில்நுட்பக்கல்லூயில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

## ஆனைக்கோட்டை பழம்வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை பழம் வீதியில் வீதி மின்குமிழ்கள் பொருத்தப்படாமையாலும் வீதி செப்பனிடப்படாமையாலும் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதியின் இரு பகுதிகளும் வெவ்வேறு கிராமசேவகர் பிரிவுகளினையும் பிரதேசசபை பிரிவுகளையும் கொண்டுள்ளதனால் இங்கு வீதி அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகளில் சிக்கல் நிலை ஏற்படுகின்றது.

வீதியின் வலதுபக்கம் ஜே/88 கிராமசேவகர் பிரிவுக்குள்ளும் யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்டும் காணப்படுகின்றது.

இடதுபக்கம் ஜே/99 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்டும் நல்லூர் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்டும் காணப்படுகின்றது.

எனினும் நல்லூர் பிரதேச சபையினர் இவ்வீதியில் எவ்வித அபிவிருத்திப் பணிகளினையும் முன்னெடுக்கவில்லை என்றும் யாழ்.மாநகரசபையே குறித்த வீதியினை செப்பனிட்டு தந்திருந்தனர் எனவும் அப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியின் செப்பனிடல் தொடர்பில் யாழ்.மாநகரசபையின் மக்கள் பங்களிப்புத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆயினும் குறித்த வீதி பலத்த சேதமடைந்திருப்பதனால் நாள்தோறும் விபத்துக்கள் அதிகரித்திருப்பதாகவும் வீதி மின்குமிழ்கள் பொருத்தப்படாமையினால் திருடர்களின் கைவரிசை அதிகரித்திருப்பதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கு யாழ்.மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)

## உள்ளூராட்சி மன்றங்களிலே வவுனியா நகரசபைக்கு அதிக நிதி

### ஒதுக்கப்பட்டது என்கிறார் இணைப்பாளர்

(குருமன்காடு)

இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வவுனியா நகரசபைக்கே அரசு அதிகளவான நிதிகளை இதுவரை ஒதுக்கியுள்ளது என்பதனை நிதியறிக்கைகளின் பிரகாரம் அவதானிக்க முடிகின்றது என வவுனியா நகரசபையின் உறுப்பினரும் வர்த்தக கைத்தொழில் அமைச்சின் வவுனியா இணைப்பாளருமான அப்துல் பாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா நகரசபைக்கு அரசு நிதியொதுக்குவதில்லை எனவும் நகர மக்களின் வரிப் பணத்தில் மாத்திரமே அபிவிருத்திகள் இடம்பெறுவதாகவும் சிலர் அறிக்கை விடுத்து வருகின்றனர். இது கவலையளிக்கும் விடயமாகும். நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கிணங்க வவுனியா நகரசபையின் பல்வேறு அபிவிருத்திகளுக்கும் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் என்ற வகையில் அமைச்சர் றிசாத் பதியுதீனால் அரச நிதிகள் பல கோடி ஒதுக்கப்பட்டதை மறந்து விடக்கூடாது.

நகரசபையினால் மேற்கொள்ளப்படும் பாரிய வேலைத்திட்டங்கள் அதிகளவில் அரச நிதியொதுக்கீட்டில் நடைபெறுகின்றமையை மறந்து தமது அரசியல் நலனுக்காக மாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர். இந்நிலையில் வவுனியா நகர அபிவிருத்திக்கு எதிர்காலத்திலும் அரச நிதியொதுக்கீடுகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் இவ்வாறான கருத்துக்கள் அவற்றை தடை செய்து விடக்கூடும்.

எனவே, நகரச்சபையின் ஊடாக இனமத பேதமின்றி அனைவரும் நகர அபிவிருத்திக்காக ஒற்றுமையுடன் செயற்படுவதை சிதைத்து விடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9-266-250)

## கணேசபுரம் பிரதேச பாலத்தை புனரமையுங்கள்!

### மக்கள் கோரிக்கை

கணேசபுரம் பகுதியின் முதலாவது வீதியில் (செட்டித்தெரு) உள்ள பாலம் புனரமைக்கபடாமையினால் அவ்வீதியில் பயணிக்க முடியாதுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியில் உபதபால் நிலையம், கால் நடை அபிவிருத்தி திணைக்களம், விஞ்ஞான கல்வி நிலையம் என்பன இயங்கி வருகின்றன.

மேற்படி நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களுக்கு செல்லும் பயணிகள் இப்பாலம் புனரமைக்கப்படாமையினால் பயணிக்க முடியாதுள்ளனர்.

போரினால் முற்றாக பாதிப்படைந்து தடிகள் போடப்பட்டுள்ளன.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து பாலத்தை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

## எஸ்ஜேசி 87 அமைப்பினரின் செயலமர்வும் உதவிகளும்


(சிவநகர்)

இசைக்கருவிகளைக் கையாள்வதற்கான பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு அதிபர் மீ. இதயதாஸ் தலைமையில் கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களின் SJC 87 அமைப்பின் மூலம் நடைபெற்ற இப்பயிற்சி நெறியினை லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி டாக்டர் தானியா எக்கநாயக்க நடத்தினார்.

மேற்படி நிகழ்வில் கிளி/தர்மபுரம் ம.வி, கிளி/சென்.தெரேசா மகளிர் கல்லூரி, கிளி/பிரமந்தனாறு ம.வி, கிளி/கோணாவில் அ.த.க, கிளி/சிவநகர் அ.த.க, கிளி/புதுமுறிப்பு அ.த.க, கிளி/ இந்துக்கல்லூரி, கிளி/ மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 130 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

மேற்படி அமைப்பின் வெளிநாட்டில் உள்ள



டாக்டர்கள், பொறியியலாளர்கள் ஆகியோரின் உதவியுடன் கிளி/ உருத்திரபுரம் ம.வியில் கணனி கற்கை நிலையம் ஆரம்பித்து எட்டுக் கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரவு நேரக் கற்றல் வகுப்பிற்கான மின் இணைப்பு வசதி, கோழி வள்ர்ப்பிற்கான உதவி, 2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணம், க.பொ.த உயர்தரம் கற்று வெளியேறிய மாணவர்களுக்கான வதிவிடக் கணனிப் பயிற்சி, விவசாயப் பயிர்ச்செய்கைக்கான ஆரம்ப உதவி என்பன வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் கோணாவில், சிவநகர், தர்மபுரம், கண்ணகைபுரம்,பிரமந்தனாறு ஆகிய இடங்களில் உள்ள கல்வி கற்கும் பிள்ளைகளின் 10 விதவைத் தாய்மார்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிநெறியை இவ் அமைப்பின் இணைப்பாளர் திருமதி ரேணுகா மற்றும் டாக்டர் சூரியகுமார், ரவிசங்கர் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

பயிற்சியின் ஆரம்ப நிகழ்வாக வடமாகாண பாடல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவன் விதுஷனின் பாட்டும் இடம்பெற்றது. வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரின் ஜென்ம ஜாதகமும் நோய்களின் வகையும்

நோய்கள் பலவிதமாக இருந்து வருகின்றன. தீரும் நோய்கள் சில, தீராத நோய்கள். பிறக்கும் போதே கர்ம வினையால் ஏற்படும் நோய்கள் சில. உடலாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் ஏற்படும் நோய்கள் சில. அப்படிப் பாதுகாத்துக் கொண்டாலும் கோள்களின் காலத்திற்கேற்றாற்போலக் கொடுக்கும் நோய்கள் சில. மருத்துவ நிபுணர்களால் தீர்க்கப்படும் நோய்கள் சில. மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடிப்பிற்கு அப்பாற்பட்ட தீராத நோய்கள் சில.

அபூர்வ நோய்கள் காலத்திற்கேற்ப அவ்வப்போது தோன்றி மருத்துவ வல்லுநர்களுக்கு ஓர் புதிய பிரச்சினையை ஏற்படுவதுண்டு.

ஜோதிடம் தோன்றிய காலத்தில் இதுபோன்ற எண்ணற்ற நோய்கள் இருந்ததில்லை என்று எண்ண இடமுண்டாகிறது. ஏனெனில் ஜோதிடம் உண்டாக்கிய முனிவர்கள் சில வியாதிகளைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மருத்துவர் குழு புதிதாகக் வரும் நோய்களுக்கு எப்படிச் சிகிச்சை முறையைப் புதிதாகக் கண்டு பிடிக்கிறார்களோ அப்படித்தான் ஜோதிட மேதைகளும் கிரக காரணத்தையும் கண்டு பிடிக்க வேண்டும்.

கர்ம வினையால் தொழுநோய், புற்று நோய்களும் அங்கவீனமும் (காது கேட்காமை, வாய் பேசமுடியாமை, கண்பார்வையின்மை) சிலருக்குப் பிறவியின் ஆரம்பத்திலும் சிலருக்கு மத்திய காலத்திலும் உண்டாகின்றன என்று கூறுகிறார்கள். இவை சிகிச்சைக்குக் கட்டுப்படாததால் தீராத நோய்களாகும்.

காச நோய், ஆஸ்துமா, ரணம், கட்டி, வயிற்றுவலி, பேதி, வாயு சம்பந்தமான நோய், காய்ச்சல் முதலியன மருத்துவ சிகிச்சைக்குக் கட்டுப்படுவதால் டாக்டர்களால் தீர்க்கக் கூடியதே. இந்நோய்கள் மனிதன் தன் உடலைச் சரிவர கவனிக்கத் தவறுவதால் ஏற்படுவனவாகும். சில மறைமுக நோய்களும் சிலருக்கு ஏற்படுகின்றன. இத்தகைய நோய்கள் ஒருவர் தவறாக நடத்து கொள்வதால் உண்டாவதாகும். ஜோதிடர் இதைக் கிரக நிலவரத்தால் எடுத்துக் கூற முடியும்.

மூளைக்கு அதிக வேலை கொடுத்து ஏதோ ஒரு குறிப்பிட்ட விடயத்தில் அதிக கவனம் செலுத்தி சதா ஒரே சிந்தனையில் ஆழ்பவர்களும் ஒருவித மூளை நோயால் பாதிக்கப்படுபவர்களாகிறார்கள். உள்ளம் பாதிப்படைவதால் உடல் பாதிப்படையும். இவர்கள் சில சமயம் புத்தி மாறாட்டம் அடைந்தவர்கள் போல காட்சியளிப்பர்.

எந்த நோயையும் ஜோதிடர்கள் ஜாதகத்தைப் பார்த்து எடுத்துக் கூறமுடியும். ஒரு ஜாதகத்தைப் பார்த்து நோய் ஏற்படும் காலம், நோயின் குணம், நோய் விலகும் காலம் முதலியவைகளை அக்கால வைத்திய சிரோன்மணிகள் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தால் அவர்களால் சிறந்த முறையில் வைத்தியம் செய்ய முடிந்தது.

ஒரு காலத்தில் வைத்தியர் என்றாலும் ஜோதிடர் என்றாலும் மணி, மந்திர, ஒளடதம் மூன்றும் தெரிந்திருக்கும். மணி என்பது ஜோதிடம், மந்திரம் என்றால் (ஆன்றோர் ஆழ்மனதிலிருந்து தோன்றிப் பலவிதமாகும் தகுதி பெற்று இன்று உலகில் நிலவுவது) மந்திரம் தான். ஒளடதம் என்றால் வைத்தியம். இவை மூன்றும் தெரிந்தவர்தான் வைத்தியர், ஜோதிடர் என்று சொல்லப்படுபவர்கள்.

இப்போது வைத்தியர்கள், மேல்நாட்டு வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றவர்கள். பெரும்பாலான டாக்டர்களுக்கு ஜோதிடம் தெரியாது. ஆனால் சத்திர சிகிச்சை செய்வதென்றால் சில டாக்டர்கள் நேரம், காலம், கிரகப் பலன்கள் பார்த்த பின்பே இப்போதும் செய்து கொண்டு வருகிறார்கள்.

எந்த நோய் ஏற்பட்டாலும் லக்னாதிபதி வலுப்பெற்றிருந்தால் உடனே குணமாகிவிடும். குறிப்பிட்ட தெசாபுத்தி காலத்தில் குறிப்பிட்ட நோய் சம்பவிக்கும் என்றால் அதனுடைய அடையாளங்கள் சில நாட்களுக்கு முன்பே தெரியவரும். லக்னாதிபதி வலுவுடன் இருக்கும் ஜாதகர்கள் உடனே மருத்துவ சிகிச்சை செய்து கொண்டு நோயைத் தடுத்துக் கொள்ளலாம்.

லக்னாதிபதி வலுவிழந்து காணப்பட்டால் நோயின் காலம் நீண்டு கொண்டே போகலாம். ஆனால் பூர்வ புண்ணியத்தால் ஏற்படும் வியாதிகள் லக்னாதிபதி வலுப் பெற்றிருந்தாலும் நிவர்த்தியாக முடியாது.

மனிதனுக்குத் தெரியாத சில மறைமுகமான ஆபத்துக்களைச் செவ்வாய் திடீரென்று செயற்பட்டு வெளிக்குக் காட்டும்போது விபத்துக்களுக்கு ஆளாகிறார்கள் ஜாதகர்கள்.

இந்நிலையையும் ஜோதிட ஆலோசனையின் பேரில் தவிர்க்கக் கூடும். இவை போன்ற நோயின் தன்மையையும் ஆபத்துக்களையும் ஜோதிடர் எப்படி விளக்குவார்?

ஜோதிட சாஸ்திரம் நன்கு பயின்றவிற்பன்னர்கள் தங்கள் அனுபவத்தைப் பயன்படுத்தி இந்தச் சமயம் இந்த விதமான நோய் அல்லது சிக்கல்கள் தோன்றக் கூடுமென்று எச்சரிக்கை விடலாம்.

அதைக் கருத்தில் கொண்ட ஜாதகர் துங்களுக்கு ஏற்படும் நிலையை ஓரளவிற்குத் தவிர்த்துக் கொள்ளலாம். இதுவன்றி ஒருவருக்கு ஏற்படும் ஓயாத உழைப்பின் காரணத்தாலும் சத்துள்ள உணவு, வசதிக் குறைவின் காரணத்தாலும் சிலருக்குச் சாதாரண நோய்கள் ஏற்படக் கூடும். காலநேரம் தெரிந்து கொண்டு இதையும் எளிதில் ஜாதகர்கள் சமாளிக்கக் கூடும்.

மூன்று, ஆறு, எட்டாமிட ஆதிபத்தியம் பெற்ற கிரகம் தான் நீச்சப் பகை இராசி பெற்றால் தன்னுடைய தெசாபுத்தி அந்திம காலங்களிலும் தன்னுடன் சம்பந்தமடைந்த கிரகங்களின் தெசாபுத்தி அந்தர காலங்களிலும் ஜாதகருக்கு நோய் ஏற்படுத்தும்.

கேந்திர திரிகோணங்களில் இருக்கும் சுயாதிபத்தியமுள்ள கிரகம் கூட தான் நிற் கும் இராசிக்கதிபதி மற்றொரு பாபாதிபத்தியம் பெற்றிருந்தால் தன் தெசாபுத்தி அந்தர காலங்களில் நோய் ஏற்படுத்தும்.

சுக்ர, சூரிய திசைகள் கூட ஆறு, எட்டாமிட சம்பந்தத்தை எப்படியாவது அடைந்தால் சில ஆபத்தான சம்பவங்களை ஏற்படுத்தக் கூடும் என்று ஜோதிட ஸ்ருதி கூறுகிறது. ஓர் யோக திசை ஆரம்பிக்கும் காலத்தில் சந்திரன் கெட்டிருந்தால் யோகத்தோடு கூட நோய்களும் ஆங்காங்கே சம்பவிக்கும் என்று ஜோதிட ஸ்ருதி கூறுகிறது.

குருதிசை ஒருவருக்கு நடந்தால் கூட குரு கெட்ட இடம் பெற்றிருந்தால் கட்டி, வீக்கம், வயிற்றுக்கோளாறு முதலியன ஏற்படக் கூடும்.

கரது நோயும் ஈரல் சம்பந்தமான தொந்தரவும் கூட ஏற்படலாம். சனி திசையில் வாத, கப நோய்கள் ஏற்படலாம் என்று சொல்லப் படுகின்றது. அவரோகணத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் மார்புவலி, கீல்வாதம், கண் கோளாறு ஏற்படுத்தக் கூடும். திசையை நடத்தும் சனி ஏழாமிடம் பெற்றிருந்தால் சிறுநீர் சம்பந்தமான நோயையும் ஏற்படுத்துவார்.

சனிபகவான், ஆறு, எட்டு ஆதிபத்தியம் பெற்று மேட, கடக, துலா இராசியில் நின்று திசையை நடத்தினால் கீல்வாதம், கைகால் முடக்கு ஏற்படுத்தக் கூடும். புதன் மூன்று, எட்டிலிருந்து தன் தெசா புத்தியை நடத்தினாலும் மூன்று, ஆறு, எட்டாமிட ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் இக்காலங்களில் விசக் காய்ச்சலும் சீதபேதியும் ஏற்படும்.

புதன் மேட, விருச்சிக, கன்னியில் இருந்தால் ரணம், கட்டி, சொறி, சிரங்கு ஏற்படுத்துவார். புதன் மீன இராசியில் நீச்சம் பெற்றுவிட்டால் கண் பார்வையில் கோளாறு அல்லது கண்கட்டி உண்டாக்குவார்.

## ஜோதிடக் களம்

# அரசியலமைப்பை நிராகரித்து உச்சநீதிமன்றம் செயற்படமுடியாது

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன

உச்ச நீதிமன்றத்தினால் அரசியலமைப்பை நிராகரிக்க முடியாது. உச்சநீதிமன்ற அறிவிப்பு அரசியலமைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளவை வேண்டுமென்றே ஒதுக்கப் பட்டிருந்தால் அது பாரதூரமான தவறாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்கள் தெரிவித்தனர்.

உச்சநீதிமன்ற அறிவிப்பில் தெரிவுக்குழுவின் அறிக்கை குறித்து விவாதிக்க முடியாது என எங்கும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறிய அவர்கள் நீதிமன்ற கட்டமைப்பை புதை குழியில் தள்ளாது இறுதி நேரத்திலாவது பிரதம நீதியரசர் ஒதுங்கிக்கொள்வார் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் மகாவலி நிலையத்தில் நடைபெற்றது.

இங்கு அமைச்சர் ஜோன் செனவிரத்ன கருத்துத்தெரிவிக்கையில், உச்சநீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களை விலக்குவதற்கு குற்றப் பிரேரணை முன்வைக்கப்படவேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 107 (3) சரத்தின்படி பாராளுமன்ற சட்டத்தினூடாகவோ நிலையியற் கட்டளையின்படியோ நீதியரசர் ஒருவரை நீக்க நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கு முன்னர் நிலையியற் கட்டளைப் படியே பிரதம நீதியரசர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படியே இம் முறையும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் அரசியலமைப்பே உயர்வானது. அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளதற்கமையவே நிலையியற் கட்டளைப்படி குற்றபிரேரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே எவ்வாறு இதனை உச்சநீதிமன்றத்தினால் நிராகரிக்க முடியும்.

நீதிமன்றத்தினால் சட்டம் அமைக்க முடியாது. வியாக்கியானம் வழங்கவே முடியும். பாராளுமன்றமே சட்டங்களை அமைக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்திற்கும் நீதிமன்ற அதிகாரம் உள்ளது.

எம்.பிகளின் சிறப்புரிமைகள் மீறப்படும் போது பாராளுமன்றத்திற்கு நீதிமன்ற அதிகாரம் இருக்கிறது. முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டது போன்று நீதிமன்றம் வேண்டுமென்றே அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளதை ஒதுக்கி தீர்ப்பு வழங்கியிருந்தால் அது பாரதூரமான தவறாகும். (அ-2)

# வெட்டுப் புள்ளிகள் இருவாரங்களில்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிங்கள மொழிமூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன. (அ-2)



சட்டக்கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது சட்டவிரோதமானது எனக் கோரி இலங்கை சட்டக்கல்லூரிக்கு முன்பாக மாணவர்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிங்கள ராவய அமைப்பு மற்றும் சட்டக் கல்லூரி நுழைவு மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைவோர் தடுத்து வைக்கப்படுவர்

## கனேடிய அமைச்சர் ஜேசன் கென்னீ



(கொழும்பு)

கனடாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல விரும்பி கடத்தல்காரர்களிடம் வீணாக பெருந்தொகை பணத்தை கொடுத்து எவரும் ஏமாற வேண்டாம் என கனடாவின் குடியுரிமை குடிவரவு மற்றும் பல்லினக் கலாசார அமைச்சர் ஜேசன் கென்னீ கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் கனடாவின் குடியுரிமை குடிவரவு மற்றும் பல்லினக் கலாசார அமைச்சர் ஜேசன் கென்னீ நேற்று முன்தினம் கொழும்பு சினமன்ட் கிராண்ட் ஹோட்டலில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இங்கு அவர் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த வருடம் கனடாவில் குடிவரவுச் சட்டம் கடுமையாக்கப்பட்டிருப்பதால் சட்டவிரோதமாக நுழையும் எவருக்கும் புகலிடம் கோர முடியாது என்பதுடன் நல்லிணக்க ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள் 10 வருடத்துக்கு மேலாக சிறையில் அடைக்கப்படுவதுடன் அவர்களிடமிருந்து பெருந்தொகையான தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் கனேடிய அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த சில வருடங்களில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைந்து புகலிடம் கோர முயற்சித்துள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தாய்லாந்து, இந்தோனிசியா, டோகா போன்ற நாடுகளுடன் இணைந்து கனடா நடவடிக்கை எடுத்துள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல்களைக் கட்டுப்படுத்த கனேடிய பிரதமர் 2012 ஆம் ஆண்டு 12 மில்லியன் கனேடிய டொலர்களை ஒதுக்கியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் முகவர்கள் கனடா பற்றிய எந்தவிதமான அறிவுமின்றி மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி அவர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டு மோசமான படகுகளில் அழைத்துச் செல்கின்றனர். அவர்களை நடுவழியில் இறக்கி பரிதவிக்கவிட்டு விட்டு தலைமறைவாகி விடுகின்றனர். இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு கனடாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்த 200 இலங்கையர் தாய்லாந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு ஜூலை 84 இலங்கையர் இந்தோனேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 209 இலங்கையர் டோகாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை அழைத்து வந்த முகவர்களைப் பிடிப்பதற்கு அந்தந்த நாடுகளுடன் சேர்ந்து கனடாவும் நடவடிக்கை எடுக்கும்.

இதனையும் மீறி சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைபவர்கள் புகலிடக் கோரிக்கையை முன்வைத்தால் அது நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுவார்கள். அத்துடன் புகலிடக் கோரிக்கை விண்ணப்பம் ஏற்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றாலும் குறைந்தது 5 வருடங்களுக்கு அவர்களுக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படாது.

அதேநேரம் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து எவரும் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்க முடியாது.

சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைபவர்கள் தடுப்பு முகாம்களிலேயே தடுத்து வைக்கப்படுவார்கள். கடந்த 2009 ஆம் ஆண்டு கப்பல் மூலம் கனடாவுக்குள் நுழைந்தவர்களில் பலர் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

எனவே சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைபவர்களின் புகலிடக் கோரிக்கைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு பரிசீலிப்பதாயினும் அதற்கு உரிய காலம் எடுக்கும். எனவே, எவரும் சட்ட விரோதமாக கனடாவுக்குள் நுழைவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் இதன் போது கேட்டுக் கொண்டார். (அ-2)

## வன்முறையாளர்கள் சபைக்கு வர பொதுமக்களே காரணம்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு மக்கள் தமது வாக்குகளின் மூலம் வன்முறையாளர்களை அனுப்பியிருந்தால் அதற்கான பொறுப்பை நாட்டில் உள்ள வாக்காளர்களே கூறவேண்டும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பேருவளை பிரதேச செயலாளர் அலுவகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அவர் கூறுகையில்,

இதனால் இதனை புரிந்து கொண்டு எந்த கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும் தவறிழைக்காத, ஒழுக்கமான நற்குணங்களை கொண்டவர்களுக்கு மக்கள் வாக்குகளை வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.


கடந்த 1950 ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக நாட்டில் தூண்டப்பட்ட இனவாதம் 1980 களுக்கு பின்னர் 30 வருட யுத்தமாக உருவெடுத்தது. இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் என இலட்சக்கணக்கான பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

அவர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் இலங்கையர்கள். எனினும் பிள்ளைகளின் கைகளில் ஆயுதங்களை கொடுத்தவர்கள் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளே. இப்படியான அரசியல் வாதிகளுக்கு நாட்டு மக்களே அதிகாரத்தை வழங்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஹசித்த மடவல படுகொலை சந்தேகத்தில் ஐவர் கைது

களனி பிரதேச உறுப்பினர் ஹசித்த மடவல படுகொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேக நபர் உட்பட 5 பேரை பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 5 பேரில் ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முற்பட்ட வேளையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடாக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (அ-2)




நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் விழிப்புலனற்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி கல்வியங்காடு விழிப்புலனற்றோர் சம்மேளனத்தில் நடைபெற்றது. சுவிஸில் வசிக்கும் அன்ரன் ரமேஷ் குடும்பத்தினரின் நிதியுதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் அன்ரன் ரமேஷ் மற்றும் அவரது இரு பிள்ளைகள் இணைந்து மாணவனொருவனுக்கு புத்தகப்பை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## பஹ்ரெய்னில் தூதரகம் அமைக்க தீர்மானம்

தூதரகம் அமைப்பதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என பஹ்ரெய்ன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமது நாட்டில் இலங்கைத் தூதரகம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான சகல உதவிகளும் செய்து கொடுக்கப்படும் என பஹ்ரெய்ன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அப்துல்லா அப்துல் லதீப் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

பஹ்ரெய்னுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை இராஜதந்திர குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் இலங்கைக் தூதரகமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசியல் பொருளாதாரம், சமூக மற்றும் பாராளுமன்ற விவகாரங்களில் அண்மைய சீர்திருத்தங்கள் தொடர்பில் அப்துல் லதீப் இலங்கை பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பஹ்ரெயின் நாட்டை அபிவிருத்தி செய்யும் முனைப்புக்களில் இலங்கையர்கள் வழங்கி வரும் பங்களிப்பு பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சண்டைக் கோழி மைதானம் சுற்றி வளைப்பு:7 பேர் கைது

நீர்கொழும்பு கதிரானை பிரதேசத்தில் இரகசியமான முறையில் சட்டவிரோதமாக இயங்கி வந்த பந்தயத்திற்கான சண்டைக் கோழி மைதானமொன்றை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.

சங்வர்தனவத்தை பிரதேச காட்டுப் பகுதியிலேயே மைதானம் இயங்கி வந்துள்ளதாகவும் தமக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே சுற்றிவளைப்பினை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றிவளைப்பின் போது மைதானத்தில் இருந்த 7 பேரைக் கைது செய்துள்ளதாகவும் பலர் தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஏழு கோழிகளும் 23 வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு கோழியும் 15 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை பெறுமதியானவை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

## இலவச பாட புத்தகங்களை விற்பனை செய்த நபர் கைது

(கொழும்பு)


மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடசாலை அப்பியாசப் புத்தகங்களை பணத்திற்கு விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பளை -நுவரெலியா வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இவ்வாறு புத்தகங்களை விற்பனை செய்த நபரே கம்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முதலாம் தரத்தில் இருந்து 11 ஆம் தரம் வரை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட ஆயிரத்து 50 புத்தகங்களே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கம்பளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

**09** **மானுடத்திற்கான திடக்கண்ணீர்!**

**இந்த உலகமே நேத்துப் பொறந்த குழந்தையாத் தெரியுது....!**

செம்பட்டிக்கு வடக்க ஒரு கல்லோ ஒன்றரைக் கல்லோ கோட்டாங்கிப்பட்டி.

இவரு தேடிப்போன முத்து மாணிக்கம் திண்ணைய ஒட்டித் தெருவுல ஒக்காந்திருக்காரு கயித்துக் கட்டில்ல.

மேல்சட்டை இல்ல. நரச்சு நாராத் தொங்குது நெஞ்சு முடி. இடுப்புல கட்டின வேட்டியையும் முழங்காலுக்கு மேல ஒரு முக்காச்சுருட்டு சுருட்டி ஒக்காந்திருக்காரு. வேட்டிங்கறதுகூட ஊருக்குக் கட்டுப்பட்டு உடுத்தறதுதான் தவிர அடிக்கற வெக்கையில வேட்டிக்கு அவரோ அவருக்கு வேட்டியோ தேவைப்பட்ட மாதிரித் தெரியல.

சுத்திமுத்தியும் தெருவப் பாத்துட்டு வீட்டுக்குள்ளயும் ஒரு பார்வைய வீசிட்டுப் பெரியவர் கால் பக்கமாப் பாத்து, உடம்பு பாரத்தை பாதி கட்டில்லயும் பாதி வெளியிலயுமாப் போட்டு ஒக்காந்துட்டாரு கருத்தமாயி.

"யாருப்பா அது.. எந்த ஊரு?"

"அய்யா நான் அட்டணம்பட்டி சீனிச்சாமி மகன் கருத்தமாயி"

"எது? தேவதானம்பட்டி அட்டணம்பட்டியா?"

"ஆமா"

"எந்தச் சீனிச்சாமி? அந்தக் குடும்பத்தோட.....?"

"ஆமாய்யா! குடும்பத்தோட செத்துப்போனாரே அந்தச் சீனிச்சாமிதான்"



"அவரு மகன்கூட ஒருத்தன் கந்துவட்டிக்காரன வெட்டிப்புட்டு செயிலுக்குப் போயிட்டானே"

"ஆமா. இப்ப வந்துட்டான்"

"வந்துட்டானா? கொலகாரப் பாவி... இப்ப என்னபண்றான்?"

பேச்சு நின்னு போச்சு கருத்தமாயிக்கி. புங்க மரத்துக் காக்காய்க மட்டும் 'அது இவன்தான் அது இவன் தான்' ங்கிற மாதிரி கத்திக்கத்தி காத அக்குதுக.

பதில்வராமப் போகவும் பெருசுதான் பேச்சைத் தொடருது.

"வெயில்ல வந்திருக்கியே தம்பி... கலர்கிலர் வாங்கிட்டு வரச்சொல்லட்டுமா?"

"வேணாம்; குடிக்கத் தண்ணி கொடுக்கச் சொல்லுங்க"

தலையத்தூக்கி வீட்டுக்குள்ள குரல வீசி அடிக்குது பெருசு.

"யம்மா தாயி சிட்டம்மா... குடிக்கத் தண்ணி கொண்டாத்தா"

"வரப்போறா... வந்துருவா" கருத்தமாயி உசுரு கண்ணுல ஏறித்துடிக்குது.

ஆளக் கொன்டுபுட்டு செயிலுக்குப் போயிவந்த ஆளுக்கு உச்சி வெயில்ல ஒடம்பு நடுங்குது. வகுத்துக்குள்ள ஒரு வவ்வா வலப்பக்கம் இடப்பக்கம் பறந்துபறந்து விலாவுல முட்டி வெளியேறப்பாக்குது.

"இப்பத்தான் குடிச்ச; எதுக்கு இன்னொரு சொம்பு கேக்கற?" முனகிக்கிட்டே வெளியே வந்த சிட்டம்மா கருத்தமாயப் பாத்ததும் களுக்குன்னு ஆகிப்போனா.

"வாங்க... எப்ப வந்தீக?"

"செயில்ல இருந்து வந்து மூணு மாசமாச்சு; ஒங்க வீட்டுக்கு வந்து காமணி நேரமாச்சு"

"எப்படியிருக்கு எங்கண்ணன்?"

"அவனுக்கென்ன? நாலுபேரு கஞ்சிய அவன் ஒருத்தனாக் குடிச்சிட்டு நல்லாத்தான் இருக்கான்"

இவுக பேச்சுவார்த்தையைக் கேட்டதும் முழிக்குது பெருசு.

"ஏம்மா... இந்தாளத் தெரியுமா ஒனக்கு? எங்க பாத்திருக்க?

கட்டிலுக்கு வெளிய கிடந்த ஒடம்ப இழுத்துக் கட்டிலுக்குள்ளயே முழு பாரத்தையும் போட்டு இப்ப கருத்தமாயி பேசுறாரு.

"சிட்டம்மாவை நான் செயில்ல பாத்தேன். ஒங்க மகன் பொத்தக்காதன் கூட, செயில்ல இருந்த சீனிச்சாமி மகன் கருத்தமாயி நாந்தான். அண்ணனப் பாக்கச் சிட்டம்மா செயிலுக்கு வர்றப்பவெல்லாம் எனக்கும் அவளுக்கும் பழக்கம். சிட்டம்மாவப் பொண்ணு கேட்டு வந்திருக்கேன். பொழப்பத்துப்போய் வந்திருக்கேன். போ...ன்னு சொல்லிராதீக. பையில துட்டு இல்ல. கையில தொழில் இருக்கு. வச்சுப் பொழப் பேன். மறுத்துராதீக"

தண்ணிச்சொம்ப வச்சிட்டு உள்ள ஓடி ஒளிஞ்சு போனா சிட்டம்மா.

முழங்காலுக்கு மேல கிடந்த வேட்டிய இன்னுங்கொஞ்சம் சுருட்டிக்கிட்டு முழிய உருட்டி உருட்டி யோசிக்குது பெருசு.

ஒளிச்சுப் பேசுறது- உள்ளொண்ணு வச்சுப்பேசுறது-பொத்துனாப்புல பேசுறது-பொத்திப்பொத்திப் பேசுறது இதெல்லாம் ஒழைக்கற சாதிக்கு ஒத்து வராது. சொல்லு சில்லுச்சில்லாத் தெறிச்சு ஓடற மாதிரி செதறு தேங்கா போடறதுதான் அவங்க வழக்கம்.

"யப்பா சீனிச்சாமி மகனே! எனம் பாத்து, குலம்பாத்து, முறைபாத்துத் தான் வந்திருக்க. சந்தோசம். செத்த வெடம் (சற்று இவ்விடம்) இரு; கோழி அடிக்கச் சொல்றேன். கொழம்பு வைக்கச் சொல்றேன். இருந்து குடிச்சுட்டுப்போ. மத்தப்படி வா... போ...ஆனா கொலகாரப்பயலுக்கு பொண்ணு கொடுப்பேன்னு மட்டும் நெஞ்சுக்கூட்டுல நெனச்சிராத.

சொம்புத் தண்ணி சொம்புலயே இருக்கு; தொண்டைய நனைக்கல கருத்தமாயி.

திரும்பவும் சொல் அத்துப்போக-காக்காய்க பேச்சுவார்த்தை நடத்திக்கிட்டே இருக்குக கண்டமேனிக்கு.

'இனி இவுக வீட்டுல கோழி அடிச்சுக் கொழம்பு குடிக்கணுமாக்கும். போகவேண்டியதுதான்'

கட்டில்ல பின்பாரமாக் கெடந்த ஒடம்ப முன்னுக்கிழுத்து எந்திரிக்கப் பாத்தாரு கருத்தமாயி,

"தம்பி யாரு?"

ஒடம்ப வளைக்காமக் கழுத்த மட்டும் திருப்புறாரு கருத்தமாயி.

கூடையத் திண்ணையில எறக்கி வச்சிட்டு முந்தானையில அழுத்தி மூஞ்சி துடைச்சு நிமிந்தா. செம்பட்டியில பாத்த வெள்ளரிக்காக்காரி.

ஒருத்தர ஒருத்தர் உத்து உத்து அதிசயமாப் பாத்துக்கிட்டாங்க.

சன்னல்பக்கமா நின்னு ஆத்தாளுக்குச் சாடை காட்டுனா சிட்டம்மா.

ஆத்தாளும் மகளும் கசகசன்னு என்னமோ பேசிக்கிட்டாக.

கொஞ்சநேரம் கழிச்சு ஆத்தா மட்டும் வெளியே வர்றா வீட்டுக்குள்ளயிருந்து.

"இந்த ஆம்பள...பய நல்ல பய. செயில்லயிருந்து பொத்தக்காதனும் தம்பியப்பத்தி நல்ல சொல்லுச் சொல்லித்தான் அனுப்பிச்சிருக்கான். சிறுக்கிமக சிட்டம்மாவும் ஆசப்பட்டுட்டா. கண்ணு இருக்க முழியத் தோண்டற களவாணிப் பயக ஊருல, தம்பி நல்ல ஆளுன்னு கண்கூடா வேற பாத்துப்புட்டேன். செயிலுக்குப் போயி வந்தவனுக்குப் பொண்ணு குடுக்க மாட்டேங்கிறியே... நாளைக்கு உன் மகனுக்குப் பொண்ணு கேட்டு ஊருல நாட்டுல எங்கபோவ? இந்தக் கல்யாணம் நடக்குது. கல்யாணத்துக்கு நீவாரியா? இல்ல கல்யாணம் முடிஞ்சு உன்கால்ல விழுகப் பொண்ணு மாப்பிளய இங்க கூட்டிட்டு வரவா?"

மக வச்ச சொம்புத் தண்ணிய இப்ப ஆத்தா எடுத்து நீட்டறா. கும்பிட்டு வாங்கி வாய் வளையத்துல உதடுபடாம அண்ணாக்க விட்டுக் கடகடன்னு குடிக்கிறாரு கருத்தமாயி.

ஒரு ஆவணிமாசம்; தேவதானப்பட்டி காமாட்சி அம்மன் கோயிலு; எண்ணி ஏழுபேரு; ரெண்டே சம்பங்கி மால; அதுல. அங்கங்க ரெண்டு மூணு ரோசாப்பூவு ஒரு ஆடம்பரத்துக்கு. மஞ்சக்கெழங்கு கட்டுன ஒரு தாலிக்கயிறு. பொண்ணு மாப்பிளயச் சேத்து ஒம்போது பேருக்குக் காப்பிக் கடையில கல்யாணப் பலகாரம். முடிஞ்சது முகூர்த்தம். ஒரு ஆணும் பொண்ணும் கூடி வாழ இம்புட்டே போதும். இதுக்கு மேல அவன் அவன் பவுசு காட்டறதெல்லாம் திமிரு-தெணாவெட்டு-வீம்பு-விறைப்பு. வேறென்னத்தச் சொல்ல?

வீட்டுக்கு வெளக்கேத்தி வச்சதும் புதுச்சேலையும் புதுமணமும் மாறாம சிட்டம்மாவத் தோட்டத்துக்குக் கூட்டிக்கிட்டுப்போயி, நட்டுவச்ச மூணு மரக்கன்னுகளையும் கும்பிடச் சொன்னாரு கருத்தமாயி. அருள் எறங்கின பூசாரி மாதிரிப் பேசறாரு:

"சொல்றேன் கேட்டுக்க சிட்டம்மா. இந்தப் பெறவிக்கு ஒனக்கு நான் துணை; எனக்கு நீ துணை. இந்த மூணு சாமிகளும் நம்ம ரெண்டு பேருக்கும் துணை. இந்த மொதத் தேக்கங்கண்டு இருக்கே இதான் எங்கப்பன் சாமி- உனக்கு மாமன். ரெண்டாம் தேக்கங்கண்டு இருக்கே அதான் எங்காத்தா சாமி- உனக்கு மாமியா. இந்த மூணாவது புங்கக் கன்னு இருக்கே அதான் எந்தங்கச்சி சாமி-ஒனக்கு நாத்தனா. குலசாமிக மூணும் கூடவே வரும். தொட்டுக் கும்பிட்டுக்க. எனக்கொரு ஆச இருக்கு எங்கப்பன் பட்ட கடனைத் தீத்து இந்தப் பூர்வீக பூமிய மீட்டிப் பத்திரத்த வாங்கி இந்தச் சாமிக கால்ல வச்சுக் கும்பிடணும். அதுக்கு நீ ஒத்துழைக்கணும் தாயி. என் கூடவே ஓடிவருவியா?"

"வாரேன் மாமா-வாரேன்"

இது நடந்து முப்பது முப்பத்தொரு வருசம் ஓடிப்போச்சு.

கருத்தமாயி கடனும் தீரல; பத்திரமும் வரல.

காலம் ஓடி ஓடிக் கடல்ல விழுகுது; பொழப்பு மட்டும் நின்ன எடத்துலயே நிக்குது.

கருத்தமாயி கனவு நனவாகிறது அவரு கையில மட்டுமா இருக்கு? ஆகாயத்தோட கையில இருக்கு; பூமாதேவி கையில இருக்கு; அரசியல்வாதி கையில இருக்கு; அமெரிக்கா-ஐரோப்பா கையில இருக்கு; ஐ.நா.சபை கையில இருக்கு. அமெரிக்கப் பத்திரிகையில-அந்தமாசம் எமிலி எழுதியிருக்காளே!-அந்தக் கட்டுரைக்குள்ள இருக்கு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூட நம்பிக்கை

## அம்புலிமாமா கதைகள்




யசோதாவுக்கு ராமு, கோபு என்று இரண்டு பிள்ளைகள் இருந்தனர். யசோதா இளம்வயதிலேயே கணவனை இழந்தவள். தன்வீட்டிற்குப் பின்புறம் பெரியளவில் தோட்டம் போட ஆரம்பித்து சிலநாட்களிலேயே அவன் இறந்து போனான். யசோதாவுக்கு விநாயகம் என்ற பிள்ளைதான் முதலில் பிறந்தவன். ஆனால், அவனை ஐந்தாவது வயதில் பள்ளியில் சேர்க்க அவன் விஷஜுரங்கண்டு இறந்தான். கிராமத்துப் பெண்ணான யசோதா எழுதப்படிக்க அறியாதவள். அதனால் கிராமத்துப் பெண்களுக்குள்ள மூடநம்பிக்கைகள் அவளிடம் மற்றையவர்களை விட மிக அதிகமாக இருந்தன. மேற்கூறிய சம்பவங்கள் அவள் மனத்தை மிகவும் பாதித்ததனால் அவள் தன் வீட்டில் போட்ட தோட்டத்தை அழித்தாள். ராமு, கோபு இருவரும் பள்ளியில் சேர்ந்தால் இறந்துவிடுவார்கள் என அஞ்சி அவர்களைப் பள்ளிக்கே அனுப்பவில்லை.

இருவரும் வளர்ந்து பெரியவர்கள் ஆனபின் கூலிவேலை பார்த்தனர். எழுதப்படிக்க அறியாத அவர்களுக்கு கூலிவேலைதான் கிடைத்தது. இருவரும் கிடைத்த கூலியை அம்மாவிடம் அப்படியே கொடுத்துவிடுவார்கள். வருடங்கள் ஆக ஆக, யசோதாவின் மூட நம்பிக்கைகளும் வளர்ந்தன. கணவன் துர்மரணம் அடைந்தது போல, மூத்தபிள்ளை அகால மரணம் அடைந்ததுபோல் தன் ஏனைய பிள்ளைகளுக்கும் எதுவும் ஆகிவிடக்கூடாது என்பதால் அடிக்கடி வீட்டுக்கு மந்திரவாதிகள், பூசாரிகளை அழைத்து ஏதாவது சாந்தி, ஹோமம், பூஜை என்று செய்து வியர்வை சிந்தி உழைத்துப்பெற்ற வருமானத்தை வீணாக்கினாள்.

இந்நிலையில் இரண்டு பிள்ளைகளுக்கும் எப்படியோ கல்யாணமும் பண்ணினாள். இருவரிடமும் குடும்ப பாரத்தை ஒப்படைத்தபின யசோதாவுக்கு நிறைய நேரம் கிடைத்ததால் அவள் பூஜை புனஸ்காரங்களில் இன்னும் அதிக நேரம் செலவழித்தாள். யார் என்ன சொன்னாலும் அதைக்கேட்டு வீட்டில் பரிகார பூஜைகளை, பூசாரிகளை விட்டு நடத்திப் பணத்தை வீணாகச் செலவழித்தாள்.

மூத்த மருமகளான கமலா சிந்திக்கும் திறன் படைத்த புத்திசாலி. அவளுக்கு மாமியாரின் மூட நம்பிக்கைகள் கட்டோடு பிடிக்கவில்லை. எவ்வளவோ யசோதாவை திருத்த முயன்றும் முடியவில்லை. மாறாக யசோதா மருமகள் மீது கோபங் கொண்டு வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம் பித்தாள். தன் மகனிடமும் கமலாவைப் பற்றிக் கோள்மூட்டினாள். மூத்த மகனான ராமு தன் புத்திசாலி மனைவி கமலாவின் புத்திமதியைக் கேட்டு நாளடைவில் திருந்தினான். அவனுக்கும் அவன் தாயின் மூடநம்பிக்கைகள் பிடிக்காமற் போயிற்று. தங்கள் வாழ்க்கையை அவை பாதிக்கின்றன என்று புரிந்தது. ஆனால் சிறு வயதில் தகப்பனை இழந்தபின் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய தாயின் மனம் புண்பட விரும்பாமல் தாய் சொல்வதற்கு எல்லாம் தலை ஆட்டிக் கொண்டு சும்மாயிருந்தான்.






ஆண்டுகள் சென்றன. கமலாவும் மற்றொரு மருமகளும் கர்ப்பமுற்றனர். இருவருக்கும் ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைகள் வளர்ந்து ஐந்து வயதை எட்டின. கமலாவுக்குத் தன் மகனைப் படிக்கவைக்கவேண்டும் என்று கொள்ளை ஆசை. அதன்படியே அவள் தன் மகனை பள்ளியில் சேர்க்க நினைக்கையில் வீட்டில் பூகம்பம் தோன்றியது. தன் பேரப்பிள்ளைகள் யாரும் பள்ளியில் சேரக்கூடாது என்று யசோதா ஒற்றைக்காலில் நின்று பிடிவாதம் பிடித்தாள். பள்ளியில் சேர்த்தாள். தன் மூத்த மகனைப்போல் பேரன்கள் அகால மரணம் அடைவார்கள் என்று உறுதியாக நம்பினாள்.

ஆனால் கமலா அந்த மூட நம்பிக்கைக்கு இடம்தர விரும்பாமல் தன் பிள்ளை படித்தே ஆக வேண்டும் என பிடிவாதம் பிடிக்க மாமியார் மருமகளிடையே பயங்கர மோதல் உண்டாயிற்று.

ராமுவுக்கு தன் மனைவி செய்வது தான் சரியென தோன்ற முதன் முதலாக தன் தாய்க்கு எதிரான கருத்தை தெரிவித்தான். அதன் பின்பு வீட்டில் இருந்தால் மாமியாரும் மருமகளும் தினமும் வீட்டை ரணகளம் ஆக்குவார்கள் எனத்தோன்றியதால் ராமு தன் மனைவி மகனுடன் தனிக்குடித்தனம் சென்று விட்டான்.

தனிக்குடித்தனம் சென்றநேரம் மிகவும் நல்லபடியாகவே ஆயிற்று. ராமுவுக்கு ஓரிடத்தில் நல்ல கூலிக்கு நிரந்தர வேலை கிடைத்தது. அவசியமான தேவைகளுக்கு மட்டும் செலவு செய்த கமலா தான் சேர்த்த பணத்தின் சொந்தத்தில் நிலம் வாங்கி அதன் நடுவில் குடிசையும் அமைத்து கொண்டாள். தன் வீட்டை சுற்றி தோட்டம் போட்டாள். அவளுடைய அயராத உடலுழைப்பின் காரணமாக அந்த நிலம் தோப்பும் துரவுமாக மாறி அவர்களுக்கு நல்ல வருமானத்தை தந்தது. அந்த செய்தியை கேட்ட யசோதா தன் மகனை வரவழைத்து அவனைத் திட்டி தீர்த்தாள்.

அடப்பாவி உன் மனைவி பேச்சைக் கேட்டு தோட்டம் போட்டால் சீரழிந்து போவாய். வீட்டருகே தோட்டம் போட்டதனால் தான் உன் அப்பா செத்துப் போனார். அது போல பள்ளியில் சேர்த்ததால் உன் அண்ணன் செத்தான். நான் சொல்வதைக் கேள் தோட்டம் வேண்டாம். உன் பிள்ளையின் படிப்பை நிறுத்து என்று உபதேசம் செய்தாள்.



தாய் பேசினால் எப்போதும் மௌனமாகக் கேட்டுக்கொள்ளும் ராமு அன்று முதன்முதலாக அம்மா நீங்கள் நினைப்பது தவறு. தோட் டம் போட்டதால் நம் அப்பா சாகவில்லை. அளவுக்கு மீறிய குடிப் பழக்கம் தான் அவர் சாவுக்கு காரணம் என்று எனக்கு தெரியவந்தது. அது போல் அண்ணன் இறந்தது விஷக்காய்ச்சலினால்தான். பள்ளியில் சேர்த்ததிற்கும் அவன் சாவுக்கும் சம்பந்தமில்லை. நாங்கள் இப்போது செய்வது சரி தான் என்று தோன்றுகிறது என்றான்.

அது கேட்டு அடிபட்ட நாகம் போல் சீறியெழுந்த யசோதா, பிள்ளைக்கும், மருமகளுக்கும் வாயார சாபங்கள் இட்டாள். அவள் ஏச்சு பேச்சுக்களை கேட்க சகிக்காமல் ராமு திரும்பினான்.

ஐந்தாண்டுகள் சென்றன. ராமுவின் குடும்பம் செழிப்பாகவும், வளமாகவும் இருக்க அவன் தம்பி கோபு வறுமையில் வாடினான். தாயின் பேச்சைக்கேட்டு தன் மகனைக்கோபு பள்ளிக்கு அனுப்பவில்லை. வயல் தோட்டம் என்று ஏதாவது வேலை செய்தால் தகப்பனைப்போல் சாவு வரும் என்று தாய் சொன்னதை நம்பி கூலி வேலை செய்தே காலத்தை கழித்து ஏழை ஆகவே இருந்தான். நாளாக ஆக முன்போல் கூலி வேலை செய்ய இயலாமல் உடல் தளர்ந்தது. படிக்காததால் பிள்ளைக்கும் நல்ல வேலை கிடைக்கவில்லை.

தன் நிலையை தன் அண்ணனின் நிலை உடன் அடிக்கடி ஒப்பிட்டு பார்த்த கோபுக்கு தன் அண் ணன் செய்ததுதான் சரியென்று தோன்றியது. அன்றே தன் அண்ணன் காட்டிய வழியை பின்பற்றாமல் தாயின் மூட நம்பிக்கைகளில் தானும் மூழ்கி வாழ்க்கையின் கீழ்த்தளத்திலேயே இருந்து விட்டோமே என்று வருந்தத் தொடங்கினான். கடைசியில் ஒரு நாள் அவனுக்கு தைரியம் உண்டாக அவனும் தன் அண்ணன் வழியை பின்பற்றத் தீர்மானித்தான்.

உடனே தாய் முன் சன்ற கோபு அம்மா! அண்ணனைப்போல் நானும் நிலம் வாங்கி உழுது பாடுபடலாம் என்று எண்ணுகிறேன். இத்தனை நாள் மூடநம்பிக்கைகளிலான தடைகள் என்னைக் கட்டியிருந்தன. இன்று நான் அவற்றை அறுக்க விரும்புகிறேன். தயவுசெய்து மறுப்புச் சொல்லாதே! என்றான்.

நீண்டநேரம் யோசித்த யசோதா இனி நான் மறுப்பு சொல்ல மாட்டேன். உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அப்படிச் செய்! என்றாள். தன் தாய் எப்படி இவ்வாறு மனம் மாறினாள் என்ற திகைப்பில் இருந்து விடுபட கோபுக்கு நீண்டநேரம் ஆயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராணியின் பதவி நீக்க விவகாரத்தில் அரசியலமைப்பை நாம் மீறவில்லை!

## அமைச்சர் கெஹலிய விளக்கம்

ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்குவதற்கான நடைமுறைகளில் அரசியலமைப்பு மீறப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பிபிசி தமிழோசைக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்குவதற்கான குற்றப் பிரேரணை நடைமுறைகளில் ஒருபோதும் அரசியலமைப்புக்கு புறம்பான வகையில் தாம் செயற்படவில்லை.

தொடர்ந்தும் அரசியலமைப்பின் பிரகாரமே குற்றப்பிரேரணை தொடர்பான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளை பதவி நீக்குவதற்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள நடைமுறைகளையே அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்துள்ளது.

அரசாங்கத்தைப் போல சபாநாயகரும் அரசியலமைப்பின்படி அவருக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பார்.

இதேவேளை, தலைமை நீதியரசர் மீதான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள சுயாதீனக்குழு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் தெரிவுக்குழு அறிக்கையின்படி ஜனாதிபதி எடுக்கின்ற முடிவு குறித்து அவரால் திருப்தியடைய முடியுமா என்பதை ஆராய்வதற்காக இந்தக் குழு ஆலோசனை வழங்கும் என்றார். (செ-11)

# நீதவான்களை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றிற்கு உண்டு

நீதவான்களை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றிற்கு காணப்படுவதாக சட்டத்தரணி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் பணிகளை சுயாதீனமான முறையில் மேற்கொள்வதற்கான உரிமை காணப்படுகின்றது. இந்த சுயாதீன உரிமைக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டால் பாதகமான நிலைமைகள் ஏற்படும்.

நாடாளுமன்றின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க எந்தவொரு நீதிமன்றிற்கும் அதிகாரம் கிடையாது.

நாடாளுமன்றில் சட்டமாக இயற்றப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் சவால் விடுக்கும் அதிகாரம் எந்தத் தரப்பிற்கும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண முதலமைச்சர்களுக்கு தீர்வையற்ற வாகனங்கள்

மாகாண முதலமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நாட்டின் அனைத்து மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு ஐம்பது இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான வாகனமொன்றை கொள்வனவு செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 40 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமொன்றை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த 2 ஆம் திகதி மாகாணசபை செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மேர்வினை அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்குங்கள்

அமைச்சர் மேர்வின் சில்வாவை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவல அண்மையில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் வரையிலேனும் மேர்வின் சில்வாவை பணி நீக்கம் செய்ய வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கடிதமொன்றின் மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொலை தொடர்பான விசாரணைகளில் திருப்தி அடைய முடியாது என பேலியகொட மற்றும் களனி பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# முன்னாள் அமைச்சரின் மகன் சடலமாக மீட்கப்பட்டார்

முன்னாள் அமைச்சர் மேவின் ஜே குரேயின் மகன் சுஜித் குரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொழும்பின் புறநகர் வாதுவையில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் முன்னர் மேல்மாகாணசபையின் உறுப்பினராகவும் செயற்பட்டார். பொலிஸ் தகவலின்படி சடலம் மீட்கப்பட்டபோது வீட்டுக்குள் மின்சார ஒழுக்கு ஏற்பட்டதை அவதானிக்க முடிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மரணத்துக்கான உறுதியான காரணம் வெளியாகவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)




★1431- ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

★1707- ஸ்கொட்லாந்து மற்றும் இங்கிலாந்து பேரரசுகளை இணைக்க இங்கிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

★1760- ஆப்கானியர்கள் மரதர்களைத் தோற்கடித்தனர்.

★1768- பிலிப் ஆஸ்ட்லி என்பவர் முதன் முதலாக நவீன சர்க்கஸ் காட்சியை லண்டனில் நடத்தினார்.

★1788- கனெடிகட் 5 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

★1793- ஜான் பியர் பிளன்சார் வாயுக் குண்டில் பறந்த முதல் அமெரிக்கர் ஆனார்.

★1799- பிரித்தானியப் பிரதமர் வில்லியம் பிட் நெப்போலியனுக்கெதிரான போருக்கு நிதி சேர்ப்பதற்காக வருமான வரியை அறிமுகப்படுத்தினார்.

★1816-ஹம்பிறி டேவி சுரங்கத் தொழிலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட டேவி விளக்கை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தார்.

★1858- டெக்சாஸ் குடியரசின் கடைசித் தலைவர் அன்சன் ஜோன்ஸ் தற்கொலை செய்து கொண்டார்.

★1861-அமெரிக்க உள்நாட்டுப்போர் தொடங்க முன்னர் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இரண்டாவது மாநிலமாக மிசிசிப்பி பிரிந்தது.

★1878-இத்தாலியின் மன்னனாக முதலாம் உம்பேர்ட்டோ முடி சூடினான்.

★1905-ரஷ்யத் தொழிலாளர் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் குளிர்கால அரண்மனையை முற்றுகையிட்டனர். சார் மன்னரின் படைகள் பலரைச் சுட்டுக் கொன்றன. (ஜூலியன் நாட்காட்டியின் படி) இந்நிகழ்வே 1905 ரஷ்யப் புரட்சி ஆரம்பமாவதற்கு வழிகோலியது.

★1916- முதலாம் உலகப் போர்: ஒட்டோமான்களின் வெற்றியுடன் கலிப்பொலி நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

★1921-புனித ஜார்ஜ் கோட்டையில் சென்னை சட்ட மன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

★1951- ஐ.நாவின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.

★1964- மாவீரர் நாள்: பனாமா கால்வாயில் பனாமாவின் தேசியக் கொடியை இளைஞர்கள் ஏற்ற முயன்ற பின்னர் அமெரிக்கப்படைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சமர் மூண்டது. 21 பொதுமக்களும் 4 படையினரும் கொல்லப்பட்டனர்.

★1972- ஹொங்கொங்கில் குயீன் எலிசபெத் கப்பல் தீக்கிரையானது.

★1974-யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராட்சி மாநாடு முடிவடைந்தது.

★1986- பொலரொயிட் உடன் காப்புரிமைப் பிரச்சினை முறிவடைந்ததைத் தொடர்ந்து கொடாக் நிறுவனம் உடனடி படம்பிடி கருவி தயாரித்தலை நிறுத்தியது.

★1990- நாசாவின் கொலம்பியா விண்ணோடம் ஏவப்பட்டது.

★1991- லித்துவேனியாவின் விடுதலைக் கோரிக்கையை நசுக்குவதற்காக சோவியத் ஒன்றியம் வில்னியூஸ் நகரை முற்றுகையிட்டது.

★2001- சீனாவின் ஷென்சூ 2 விண்கலம் ஏவப்பட்டது.

★2005- சூடான் அரசுக்கும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கென்யாவில் கைச்சாத்திடப்பட்டது.

### பிறப்புக்கள்

★1868- சோரென்சென், டென்மார்க் வேதயியலாளார் (இ.1939)

★1908- சிமோன் ட பொவார், பிரெஞ்சுப் பெண் எழுத்தாளர்(இ.1986)

★1913- ரிச்சர்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ.1994)

★1927- துரைசாமி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர் (இ.1971)

★1989- மைக்கல் பீஸ்லி, அமெரிக்கக் கூடைப்பந்தாட்டக்காரர்

### இறப்புக்கள்

★1873- மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன் (பி.1808)

★1924- சேர் பொன்னம்பலம் அருணாசலம், இலங்கையின் தேசியத் தலைவர் (பி.1853)

★1961-எமிலி பால்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1867)

### பொன்னம்பலம் அருணாசலம்



பொன்னம்பலம் அருணாசலம் என்பவர் சேர் பொன். அருணாசலம் எனப் பொதுவாக அறியப்பட்டவர். அவரது காலத்தில் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர்.

#### வாழ்க்கை குறிப்பு

பொன்னம்பலம் அருணாசலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மானிப்பாயைச் சேர்ந்த கேட் முதலியார் என அழைக்கப்பட்ட பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மூன்றாவது மகனாக 1853 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு கல்வி கற்றபோது 1870 இல் இராணி புலமைப்பரிசிலையும் பெற்று லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் கிறைஸ்ட் கல்லூரியில் கலைமாணிப்பட்டம் பெற்றார். பவுண்டேஷன் புலமைப்பரிசிலைப் பெற்று கணிதத்திலும் புராண இலக்கியத்திலும் சிறந்த சித்திகளைப் பெற்றார்.

இவ்ரது மனைவியின் பெயர்: சுவர்ணம் நமசிவாயம். இவருக்கு எட்டு பிள்ளைகள்; பத்மநாபன், அருணாசலம் மகாதேவா, அருணாசலம் இராமநாதன் ஆகிய ஆண்பிள்ளைகள், மகேஸ்வரி செகராசசிங்கம், மனோன்மணி பத்மநாதன், பத்மாவதி பரராஜசிங்கம், சிவானந்தம் தம்பையா, சுந்தரி நடராஜா ஆகிய ஐந்து பெண்பிள்ளைகள்.

#### மறைவு

இவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி தனது 71 ஆவது வயதில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயப் பிரதேசத்தில் காலமானார்.

#### நினைவுச் சின்னங்கள்

1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி அரசாங்க சபை மைதானத்தில் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) தேசாதிபதியால் அருணாசலத்தின் வெண்கலச்சிலை திறந்து வைக்கப்பட்டது. இவரது உருவப்படங்கள் றோயல் கல்லூரி, சமூக சேவைச் சங்கம், இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைமை அலுவலகம் என்பவற்றில் திறந்து வைக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக மண்டபம் ஒன்றிற்கு அருணாசலத்தின் பெயரும் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2013



## விருச்சிகம்



**விசாகம் 4 ஆம் பாதங்கள், அனுஷம், கேட்டை**

**செல்வவளம் பெருகும்; செல்வாக்கு உயரும்! புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு, பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!**



புத்தாண்டு உங்களுக்கு பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப் போகிறது. அத்தனை பேரும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கைத்தரம் உயரப் போகிறது. அதிகார வர்க்கங்கள்கூட உங்களுக்கு அடிபணிந்து நடக்கும் விதத்தில் குருவின் பார்வை பலம் கொடுக்கிறது. சந்திரபலத்தோடும், சந்திர மங்கள யோகத்தோடும் பிறக்கும் இந்த 2013 ஆம் ஆண்டு சந்தோஷங்களையும் சகல பாக்கியங்களையும் வரவழைத்துக் கொடுக்கும் விதத்தில் சாதகமாக இருக்கிறது.

**சிவல்புரி சிங்காரம்**

இயற்கையிலேயே கலைவாணியின் அருள்பெற்றவர்கள் நீங்கள். எதை நீங்கள் சொன்னாலும் பலிக்கும். நீங்கள் காணும் கனவுகளும் பலிக்கும். உங்கள் ஆலோசனை கேட்டு நடந்தவர்கள் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிப்பர் என்பதால் உங்களை சுற்றி ஒரு மாபெரும் ரசிகர் கூட்டமே இருக்கும்.

சனி, செவ்வாயின் பார்வை காலத்தில் மட்டும் சகஜ நிலையிலிருந்து நீங்கள் மாறுபடாமல் இருக்க, பணிபுரிவதோடு பரிகாரங்களையும் வழிபாடுகளையும் நீங்கள் செய்து வந்தால் இனிக்கும் வாழ்க்கை எந்நாளும் அமையும். அந்த நேரத்தில் ஆதியந்த பிரபு வழிபாடும், சனீஸ்வர வழிபாடும் ஆறுமுகப்பெருமான் வழிபாடும் செய்வது நல்லது.

உங்கள் ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும் புத்தாண்டில் உள்ள கட்டங்களையும் ஒப்பிட்டுப்பார்த்து அப்போதைக்கப்போது நடைபெறும் திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் வழிபாடுகளை மேற்கொள்வதோடு 12 இல் சஞ்சரிக்கும் இராகுவால் பணவரவு கூடவும் 6 ஆம் இடத்து கேதுவால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறவும் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையவும் புத்தாண்டில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஆலயத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாக செய்து கொள்வது நல்லது.

எண்கணித அடிப்படையில் இந்த ஆண்டு உங்கள் இராசிக்கு 7,12 இற்கு அதிபதியாக விளங்கும் சுக்கிரனுக்குரிய ஆண்டாக அமைகிறது. உங்கள் பிறந்த திகதிக்கேற்ப பெருமை சேர்க்கும் விதத்தில் உங்கள் பெயரை அமைத்துக் கொள்வதோடு, உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் வருங்காலம் வசந்தகாலமாக இருக்கும்.

உங்கள் இராசி அடிப்படையில் ஏழரைச்சனி உருவாகிறது. இது முதல் சுற்றா? இரண்டாவது சுற்றா? மூன்றாவது சுற்றா? என்பது சுயஜாதகத்தின் அடிப்படையில் பார்த்துக் கொள்ளுங்கள். முதல் சுற்றாகவோ, மூன்றாவது சுற்றாகவோ இருந்தால் சனிபகவானை பணிந்து, வணங்கி பலவிதங்களிலும் நன்மைகளை பெறலாம். இரண்டாவது சுற்றாக இருந்தால் நீங்கள் துணிந்து செய்யும் காரியங்களுக்கு சனிபகவான் துணையாக இருப்பார்.

வருடத் தொடக்கத்தில் சனிபகவானும், இராசிநாதன் செவ்வாயும் உச்சம் பெற்றிருக்கிறார்கள். சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். சூரியனும் புதனும் இணைந்து புத- ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். குருவும் சுக்ரனும் ஒன்றையொன்று பார்த்து வெற்றி வாய்ப்புகளை வீடு தேடி வரவழைத்துக் கொடுக்கும் விதத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, உண்மையிலேயே இந்தப் புத்தாண்டு உங்களுக்குப் புதிய திருப்பத்தை தரும் ஆண்டாக அமையப் போகிறது.

**01.01.2013 முதல் 27.05.2013 வரை**

இக்காலத்தில் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கிறார். அதன் பார்வை உங்கள் இராசியிலேயே பதிகிறது. அதுமட்டுமல்ல, 3,11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது. எனவே, உங்கள் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு கைகொடுத்து உதவுவர். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் கூடும். விருதுகளும் வெற்றிச் செய்திகளும் வீடுவந்து சேரும்.

குரு வக்ரமாக இருந்தாலும்கூட, தன பஞ்சமாதிபதியாக இருப்பதால், தொழிலில் இலாபம் இருமடங்காக வந்து சேரும். இடம், பூமி வாங்கி மகிழ்வீர்கள். வீடு கட்டும் முயற்சியிலும் வெற்றி கிட்டும். பழைய வீட்டை புதுப்பித்து, பலரும் பார்த்து இரசிக்கும் விதத்தில் மாற்றி அமைப்பீர்கள். அயல்நாட்டு தொடர்பு அனுகூலம் தரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து கேட்ட உதவிகளைச செய்து கொடுப்பர்.

வருடத் தொடக்கத்தில் சனியும், இராகுவும் 12 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் விரய ஸ்தானம் பலப்படுகிறது. எனவே, சுப விரயங்கள் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். அவற்றில் கல்யாண கனவுகளை முன்னிட்டு தங்கம், வெள்ளி போன்றவைகளை தாராளமாக வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். வீட்டிற்குத் தேவையான மின்சாதன பொருட்களையும் வாங்கி மகிழக் கூடிய நேரமிது.

நம்பிக்கைக்குரியவர்கள் உங்களுக்கு நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். அன்பு மனத்தோடும் ஆதரிக்கும் குணத்தோடும் இருக்கும் உங்களுக்கு இன்பங்களை மட்டும் வரவழைத்துக் கொள்ள எளியவழி, இறைவழிபாடு ஒன்றுதான். தெய்வ அனுகூலம் இருந்தால் தேசத்தையும் ஆளலாம். செல்வாக்கையும் உயர்த்திக் கொள்ளலாம். அதற்கு உதவுவது எந்த தெய்வம் என்பதை அறிந்து கொண்டு செயற்படுவது தான் புத்திசாலித்தனம். இந்தக் காலத்தில் "வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே" என்ற குரு கவசத்தைப் பாடி குருவை வழிபாடு செய்வது சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**28.05.2013 முதல் 31.12.2013 வரை**

இக்காலத்தில் குரு மிதுன இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2,4,12 ஆகிய இடங்களை பார்க்கிறார். இதன் விளைவாக குடும்பத்தில் ஒற்றுமை கூடும். மகிழ்ச்சி அதிகரிக்கும். காது குத்து முதல் கல்யாணம்வரை மணி விழா, மணவிழா, முத்துவிழா, வெள்ளி விழா என்று முத்தான விழாக்களை கொண்டாடி மகிழ்வீர்கள் குரு தன் வீட்டை தானே பார்க்கிறார் என்பதால், அற்புதமான பலன்கள் இக்காலத்தில் நடைபெறும்.

தாய்வழி ஆதரவு பெருகும். தங்கு, தடைகள் அகலும். ஆரோக்கியத்திற்கு என்று இதுவரை அதிகம் செலவிட்டிருக்கலாம். இனி ஜோரான வாழ்க்கையும் சொகுசான பயணங்களும் அதிகரிக்கும். வராத கடன்கள் வசூலாகும். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்வீர்கள்.

பனிரெண்டாம் இடத்தை பார்க்கும் குருவால் பயணங்கள் அதிகரிக்கும். இந்தியாவில் ஒருநாள், இத்தாலியில் மறுநாள், லண்டனில் மூன்றாம் நாள் என்று தொழில் ரீதியாக பயணங்களை மேற்கொள்ளும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் சிறப்பாக முடிவடையும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடங்கள் இப்போது இலாபத்தைத் தரும்.

**குருவின் வக்ர காலம்!**

கிரகங்கள் வக்ர இயக்கத்தில் இருக்கும்பொழுது எதையும் யோசித்து செய்வதே நல்லது. பொதுவாக உங்கள் இராசியை பொறுத்தவரை 2,5 ஆகிய இடங்களில் அதிபதியானவர் குரு. அதன் பார்வை பலம்தான் முக்கியம். வக்ர இயக்கத்தில் பலக்குறைவோடு பார்க்கும் பொழுது ஒரு காரியத்தை இரு முறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். அலைச்சல் அதிகரிக்கும். பணியாளர்களை மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

**சனி, செவ்வாய் பார்க்கும் காலம்**

ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தை பார்க்கும் பொழுது நல்ல மாற்றங்களும் வந்து சேரும். திடீர் திருப்பங்களும் ஏற்படலாம். அந்த அடிப்படையில் உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் செவ்வாய் 3,4 இற்கு அதிபதியான சனியைப் பார்க்கிறார். எனவே, வழக்குகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

நாடுவிட்டு நாடு செல்ல நினைப்பவர்களுக்கு நல்ல நேரம் இது. இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றங்கள், இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடியே ஒரு சிலருக்கு வந்து சேரும். கேட்ட இடத்திற்கு கிடைக்காவிட்டாலும், கிடைத்த இடத்தில் போய்ச் சேர்வதே நல்லது.

கணவன்- மனைவிக்குள் கனிவு கூட அனுசரிப்பு தேவை. விட்டுக்கொடுத்து செல்வதன்மூலம் வீட்டில் ஒற்றுமை பலப்படும். கோபம், படபடப்பு ஆகியவற்றை தவிர்த்து குணநலனில் அன்பைப் பெருக்கிக் கொண்டால் இக் காலம் கூட இனிய காலமாக மாறும்.

விருச்சிக இராசியில் பிறந்த உங்களுக்கு வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும். வருடத் தொடக்கத்தில் வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும். கணவன்- மனைவிக்குள் கனிவு தரும். பாசமும், நேசமும் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கவும், தொழில் தொடங்கவும் முடிவெடுப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒருதொகையை செலவிடும் சூழ்நிலை உண்டு. ஆரோக் கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் இரு முறை யோசித்துச் செய்வதே நல்லது. சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். இனிக்கும் செயல்கள் ஏராளமாக நடக்க இராகு- கேதுக்களுக்கு பரிகாரம் செய்து, சர்ப்ப சாந்திகளையும் மேற்கொள்வது நல்லது. வருடக் கடைசியில் தாய்வழி தனலாபம் உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர். இந்த ஆண்டு மறக்க முடியாத ஆண்டாக அமையும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

தினசரி வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு, வருட வழிபாடு, சிறப்பு வழிபாடு என்று செய்துவந்தால், பொன்னும் பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகும்.

செவ்வாய்கிழமை தோறும் ஆனைமுகப்பெருமானையும் ஆறுமுகப்பெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

உங்கள் பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து தெய்வ வழிபாட்டை மேற்கொண்டு, சர்ப்ப சாந்தியை செய்வது சந்தோஷத்தைத் தரும்.

(தொடரும்)

## அத்தனை பேரும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கைத்தரம் உயரப் போகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற சுயாதீனத்தை காட்டி நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முயற்சி

## இளம் சட்டத்தரணிகள் சங்கம்

நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை இல்லாமல் போகின்றது என்ற வசனத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லையென இலங்கை சுயாதீன இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

இலங்கை சுயாதீன இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

நாட்டில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்ற விடயத்தை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்று நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க சில தரப்பினர் முயற்சிக்கின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் பின்புலத்துடன் செயற்படும் சட்டத்தரணிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுமே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

இதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கும் போது நீதித்துறையின் சுயாதீனம் பற்றிப் பேசாதவர்கள் அரசியலமைப்புக்கு அமைய பிரதம நீதியரசரை நீக்க முற்படும் போது நீதித்துறையின் சுயாதீனம் பறிபோவதாகக் கூறுகின்றனர். அரசியலமைப்புக்கு அமைவாகவே பிரதம நீதியரசரை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டம் நடத்துபவர்கள் யார் என்பதைப் பார்க்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முயற்சித்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பின்புலத்துடன் செயற்படும் சட்டத்தரணிகளும் சில எதிர்க்கட்சிகளுமே தற்பொழுது எழுந்திருக்கும் பிரச்சினையின் பின்னணியிலும் உள்ளனர்.

சட்டத்தரணிகள் தமது தொழிலுக்கு மரியாதை கொடுக்காமல் வீதிக்கும் நடை பாதைகளுக்கும் இறங்கியுள்ளனர். இந்த நடவடிக்கையானது சட்டத்தரணிகள் என்ற தொழிலை அகௌரவப்படுத்தும் வகையிலான நடவடிக்கையாகும் என்றார். (அ-2)

# இனந்தெரியாத துப்பாக்கிதாரி இன்னமும் சுதந்திரமாக திரிகிறார்

## சுதந்திர ஊடக அமைப்பு குற்றச்சாட்டு

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்கவை படுகொலை செய்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி இன்னமும் சுதந்திரமாக சுற்றித் திரிவதாக சுதந்திர ஊடக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அமரர் லசந்த படுகொலை செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் நேற்றுடன் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்தார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத அரசியல் கலாசாரமும் ஊடக அடக்குமுறைக் கலாசாரமும் தொடர்ந்து நீடித்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளது. அரசாங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான குற்றச் செயல்களினால் குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றித் திரிவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இரண்டு சிரேஷ்ட சட்டத்தரணிகளை அச்சுறுத்திய அதேவேளை, களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவலவை சுட்டுக்கொலை செய்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினர், நீதவான்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அச்சுறுத்தக்கூடிய அதிகாரமும் பலமும் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (அ-2)

# மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படவில்லை-பேச்சாளர்

மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரிய அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளின் போது முப்படையினரின் பங்களிப்பு பிழையான பிரசாரம் செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலைமைத்துவ பயிற்சியில் படையினர் ஒரு சிறிய அளவிலான பயிற்சிகளை மட்டுமே மாணவர்களுக்கு வழங்குகின்றனர். ஆனால் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியம் ஆகியன பிழையான பிர சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டாலும் பல்கலை. பேராசிரியர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுமே பயிற்சிகளை நிர்வாகம் செய்கின்றன.

உயர்கல்வி அமைச்சின் கொள்கைகளுக்கு அமைவான முறையில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

இலங்கையில் ஒரே தடவையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய ஒரே இடமாக இராணுவ முகாம்கள் காணப்படுவதாகவும் இதனால் தலைமைத்துவ பயிற்சிகளை முகாம்களில் நடத்துவதாகவும் இராணு[illegible] (அ-2)

# மிகப்பெரும் ஆய்வகமாக பல்கலைக்கழகங்கள் மாறும்

புதிய உலகில் தேடல் மிக்க மிகப்பெரும் ஆய்வகமாக பல்கலைக்கழங்களை மாற்றவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தலைமைத்துவப் பயிற்சி வேலைத்திட்ட மேற்பார்வையின் போதே அமைச்சர் இவ் வாறு கூறியுள்ளார்.


பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# வல்லாரையின் மருத்துவப் பண்புகள்

### வல்லாரை

கீரை வகைகளுக்குள் இரும்புச்சத்து நிறைந்த கீரைகளில் வல்லாரையும் ஒன்றாகும். இரத்த விருத்திக்கு அத்தியாவசியமானது. இக் கீரையில் கல்சியம், பொஸ்பரஸ், புரதம், இதர சத்துக்கள் நிறைந்துள்ளன. அன்றைக்கே



பறித்த புதிய கீரைகளே சிறந்தவை. கீரைகளை சமைக்கும் போது வேக வைத்த நீரை கீழே ஊற்றி விடாமல் உணவில் சேர்த்து விட வேண்டும். மேலும் நமக்கு வரும் மலச்சிக்கலை போக்க கீரை வகைகள் பெரிதும் உதவுகின்றன. எனவே, உணவுடன் கீரை வகைகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வகையான கீரைகளில் ஒவ்வொரு வகை சத்துக்கள் உண்டு. எனவே, அவற்றை தெரிந்து அவற்றை உணவுடன் சேர்த்து கொள்ளல் அவசியமாகும்.

### மருத்துவப் பண்புகள்

☆ இக்கீரையை பருப்புடன் கலந்து கடைந்து வாரம் ஓரிரு முறை உண்ணலாம். இக் கீரை சிறுநீரைப் பெருக்கும். இளைத்த உடலை வளர்க்கும், மலத்தை இளக்கும், பசியை உண்டாக்கும், வெண்குட்டம், சோகை, சிறுநீரகக் கோளாறுகள், இரத்த நோய்கள், மார்புச்சளி என்பவற்றை நீக்கும்.

☆ மூளை, இருதயம் ஆகியவற்றுக்கு நல்ல வலிமையை தரும். இக்கீரை உண்பவருக்கு நினைவு ஆற்றலை கூட்டும். ஆயுளை விருத்தி செய்யும். இக் கீரை வயிற்றில் உள்ள புண்களை ஆற்றும்.

☆ வல்லாரைக் கீரையினால் பல் துலக்க பல்லிலுள்ள அழுக்கு போகும். பல் பளிச் சென்று வெண்மை பெறும்.

☆ தொழுநோய் ஆரம்ப நிலையிலுள்ளவர்கள் இச்செடியை பொடித்து தினம் 3. வேளை உண்ண நல்ல குணம் கிடைக்கும்.

☆ வல்லாரை இலையை பொடித்து 130-300 mg தினம் பாலில் கலக்கித்தர நினைவாற்றல் அதிகரிக்கும்.

☆ தற்காலங்களில் சிறுவர்கள் சிற்றுண்டி உணவுகளையே பெரும்பாலும் நாடுகின்றனர். அத்துடன் சுவையூட்டப்பட்ட, நிறமூட்டப்பட்ட அஜினமோட்டோ உப்புச் சேர்க்கப்பட்ட மிக்சர், சிப்ஸ், இனிப்பு வகைகளை அதிகம் விரும்பி உண்பதால் மாணவர்களின் உடல் சுறுசுறுப்பு, மூளைப்பலம் என்பன மந்தமடைகின்றன.

எனவே, சிறுவர்கள் விரும்பி உண்ணும் கேக், பிஸ்கட் போன்றவற்றை இயற்கையான முறையில் வீட்டில் தயாரித்து வழங்கலாம். கேக்கினை தயாரிக்கும் போது சாதாரணமாக ஏனைய செய்முறைகளைப் பின்பற்றி இறுதியில் கேக் 1/2 kg எனின் அதற்கு 100 ml வல்லாரை இலைச்சாற்றை சேர்த்து தயாரித்து பேக்(Bake) பண்ணலாம். இல்லாவிடில் வல்லாரை இலைப் பொடியை 50g அளவில் சேர்த்தும் பேக்(Bake) பண்ணலாம். இவ்வாறு சிற்றுண்டி வகைகளில் வல்லாரை இலைச் சாற்றையோ வல்லாரைப் பொடியையோ சேர்த்து உணவு தயாரிப்பதால் சிறுவர்கள் இதனை விரும்பி உண்ணும் போது அவர்களின் மூளை பலப்படுவதோடு நரம்புகளும் வன் மையுறும்.

☆ இவ்வாறு வல்லாரையை சேகரித்து உலர்த்தி பொடித்து காற்றுப்புகாத ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு சிறுவர்களுக்கு 1/2 தேக்கரண்டியும் வளர்தோருக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினமும் இரவில் பாலில் கொடுத்து வர அவர்களின் மூளை நரம்புகள் நன்கு விருத்தியடைந்து வன்மையுறும்.

### 100 கிராம் வல்லாரையில் உள்ள சத்துக்கள்

| | |
|---|---|
| ✶ ஈரலிப்பு | 84.5 g |
| ✶ சக்தி | 37 Kcal |
| ✶ புரதம் | 2.1 g |
| ✶ கொழுப்பு | 0.5 g |
| ✶ காபோவைதரேற் | 6 g |
| ✶ கல்சியம் | 224 mg |
| ✶ பொஸ்பரஸ் | 32 mg |
| ✶ இரும்பு | 68.8 mg |
| ✶ βகரோட்டின் | 3600 μg |

### வல்லாரை கோப்பி பொடி

| | |
|---|---|
| ✦ வல்லாரை இலை | 2 கப் |
| ✦ மிளகு | 50 g |
| ✦ சுக்கு | 50 g |
| ✦ காய்ந்த மல்லி | 100 g |

### செய்முறை

வல்லாரை இலை, சுக்கு, மிளகு, மல்லி அனைத்தையும் வெயிலில் உலர்த்தி பொடியாக்கி கொள்ளவும். இவ்வாறு பொடித்த தூளில் 3 ஸ்பூன் ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர், பால் முக்கால் டம்ளர் ஊற்றி காய்ச்சி சீனியுடன் காப்பி தயாரித்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை காலை/ மாலை பருக நீரிழிவு நோய், தேக உஷ்ணம் குணமாகும், பசியை தூண்டும்.

### வல்லாரை சர்பத்

| | |
|---|---|
| ❖ வல்லாரை | 1 Kg |
| ❖ ரோசாப்பூ | 1/2 Kg |
| ❖ சீனி | 1 Kg |

வல்லாரை, ரோசாப்பூ இரண்டையும் இடித்து சாறெடுத்து 2 *l* தண்ணீர் சேர்த்து 1/2 *l* ஆக சுண்டும் வரை காய்ச்சி சீனி 1 Kg சேர்த்து பதமாக காய்ச்சி வடித்து வைத்து இதனுடன் ஐஸ்கட்டிகள் போட்டு காலை, மாலை, மதியம் குடித்துவர கோடை காலத்தில் வரும் வியர்க்குரு, மேகச்சூடு, உடம்பு எரிச்சல் யாவும் குணமடையும்.

### வல்லாரை இலை சூப்

கழனி நீரை மண் சட்டியில் ஊற்றவும். மல்லித் தூளை போடவும். கொதிக்க விடவும். கீரையை அலசி நீரை வடியவிட்டு வேகவிட்டு வாணலியில் நெய் ஊற்றி சோம்பை தூள் செய்து போட்டு சிவந்ததும் பூண்டு, இஞ்சியை கரகரப்பாக அரைத்து போட்டு வதக்கி, மீதி வெங்காய துண்டங்களை போட்டு வதக்கி தக்காளியை அரிந்து போட்டு வதக்கி சூப்பில் தாளிக்கவும். உப்பு போடவும். மிளகாயை நெய்யில் வறுத்து போடவும். மஞ்சள் பொடி போடவும். வெந்தயத்தை சூப் இறக்கியதும் போடவும். கடைசியாக தேங்காய்ப்பாலை ஊற்றி கலக்கி சாப்பிடவும். இதன் சுவையே தனி.

**பயன்:-**

வாய்ப்புண், வயிற்றுப்புண், கர்ப்பப்பைப் புண் ஆறும், ஞாபக சக்தியுண்டாகும், பெண்களின் வெள்ளை நோய்க்கு நல்லது.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1970 இன் வரலாற்று நிகழ்வுகள் மீளவும் அரங்கேறுகின்றன...!

**சன்டே லீடருக்கு த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வரைந்ததிலிருந்து..**




இலங்கையின் இனப்பிரச்சினையில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி என்பது ஒரு வித்தியாசமான மைல் கல்லாக காணப்படுகிறது. இந்த நாளன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தமது பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாவீரர்தின நிகழ்வைக் கொண்டாடியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பல்கலைக்கழக மாணவிகள் விடுதி ஒன்றினுள் அத்துமீறி நுழைந்தனர்.

இதற்கு மறுநாள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் நால்வரை இலங்கை காவற்றுறையின் கீழ் செயற்படும் பயங்கரவாத விசாரணைப்பிரிவினர் கைது செய்தனர். இதனுடன் தொடர்பு பட்ட வேறு 40 பொதுமக்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் தவிர வேறெவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ்; இந்த மாணவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சொந்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த மாணவர்கள் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த பழைய வரலாற்றுச் சம்பவங்களுடன் தற்போதைய நவம்பர் 27 சம்பவத்தை ஒப்பீடு செய்துகொள்வதென்பது மிக முக்கியமானதாகும்.

1970 களின் ஆரம்பத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். குறிப்பிட்ட சில முக்கிய உரிமைகள் இவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட பரிந்துரைகளும் பெரும்பான்மை அதிகார வர்க்கத்தால் தோற்கடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற அமர்வுகளிலிருந்து வெளிநடப்பு செய்தது. இதன் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் தனது நாடாளுமன்றப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

தமிழ் மக்கள் தமது தீர்மானத்தில் உறுதியாக நிற்பதையும், தமிழ் மக்கள் இலங்கையின் முதலாம் குடியரசு யாப்பை ஏற்கமறுப்பதாகவும் தெரிவித்த தலைவர் செல்வநாயகம் இலங்கை அரசாங்கம் மீண்டுமொரு தேர்தலை நடாத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். அப்போது அகில இலங்கை தமிழ் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தியாகராஜா, அருளம்பலம் மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோர் பதவியிலிருந்தனர். இந்தத் தேர்தலை நடாத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்த போதிலும் இறுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் பெரும்பான்மை வாக்குப்பலத்துடன் தேர்தலில் வெற்றிபெற்றார்.

இக்காலப்பகுதியில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. அதாவது தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாவதைத் தடுப்பதற்காக தரப்படுத்தல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் தமிழ்ப்பெற்றோர் தமது பிள்ளைகள் உயர்கல்வி கற்கவேண்டும் என்பதற்காக தமது நிலங்களை விற்றும் அடகு வைத்தும் அவர்களை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைத்தனர். தமிழ் மக்கள் இவ்வாறு ஓரங்கட்டப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானியாவுக்கு இளையோர்கள் புலம் பெயர்ந்தனர். பின்னர் இவர்கள் முதலாவது ஆயுதக்குழுக்களாக உருவெடுத்தனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட ஆயுதக்குழுக்களில் ஈழ மாணவர்களின் பொதுச் சங்கம் மற்றும் மாணவர்களின் ஈழப் புரட்கர அமைப்பு என அழைக்கப்படும் ஈரோஸ் ஆகியனவும் உள்ளடங்குகின்றன. இவ்விரு அமைப்புகளும் மாணவர் அமைப்புகள் என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

இந்த மாணவர் அமைப்புகள் தோற்றம் பெற்று சிறிது காலத்தின் பின்னர் உருவாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பானது மாணவர் அமைப்புக்களின் தேரற்றத்தின் பகுதியானது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். 1970 களின் மத்தியில் தமிழ் இளையோர்கள் தமக்கான உயர்கல்வி உரிமை மறுக்கப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் தமது போராட்டங்களைத் தீவிரப்படுத்தினர். இவ்வாறு ஓரங்கட்டல்களை எதிர்த்து தமிழ் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இவர்கள் ஜனநாயக வழியில் போராட்டங்களை நடாத்திய போதிலும் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிராக எந்தவொரு குற்றங்களும் முன்வைக்கப்படாது நீதிமன்றில் இவர்கள் முன்னிலைப்படுத்தப்படாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தமிழ் இளையோர்களில் 40 இற்கும் மேற்பட்டவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக எந்தவொரு விசாரணைகளுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டனர்.

கொழும்பில் அணிசேரா உச்சி மாநாடு ஒன்று நடைபெறுவதற்கு முன்னர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட மாணவர்கள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுள் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவும் ஒருவராவார்.

எழுச்சிகொண்ட தமிழ் இளையோரின் ஆர்ப்பாட்டங்களையும் நடவடிக்கைகளையும் முறியடிப்பதற்காக வீரதுங்கவின் தலைமையில் பயங்கரவாதத்தை ஆறு மாதங்களில் ஒழித்தல் என்ற நோக்குடன் இலங்கையின் வடக்குக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்தே தமிழ் இளையோர் தாம் ஆயுதம் தூக்க வேண்டும் என உந்தப்பட்டனர். மாலை நேரங்களில் வீதிகளிலும் சந்திகளிலும் கூட்டமாகக் காணப்பட்ட தமிழ் இளையோர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கடும் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதன் பின்னர் இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியாத தமிழ் இளையோர்கள் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து கொண்டனர். இவர்களிற் சிலர் மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு- கெரில்லா நடவடிக்கைக்கான இராணுவப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு பயிற்சிகளை முடித்துக்கொண்ட இளையோர் இலங்கைக்கு திரும்பிவந்த பின்னர் இலங்கை இராணுவத்தை எதிர்த்து பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டனர்.

1983 களின் பின்னான காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட ஜுலைக்கலவரம் இலங்கை அரசின் தமிழ்மக்கள் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையாக பார்க்கப்பட்டது. பங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எந்தவொரு தமிழ் ஆயுதக்குழுக்களும் தோற்றுவாயாக இருக்கவில்லை. நாட்டில் பயங்கரவாதம் தோன்றுவதில் இலங்கை அரசே முதன்மைக் காரணமாக இருந்துள்ளது.

வன்முறைகளும் அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளும் மே 2009 வரை தொடர்ந்து கொண்டேயிருந்தன. இதனால், பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாக்கப்பட்டன். மே 2009 இற்குப்பின்னர் இருதரப்புகளிடையில் யுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டாலும்கூட வன்முறைகள் வேறுவடிவங்களில் தொடரப்படுகின்றன. தமிழ் பொதுமக்களைக் குறிவைத்து இவ்வாறான வன்முறைகள் தற்போது தொடரப்படுகின்றன.

யுத்தத்தின் முடிவில் இடம்பெயர்ந்த மக்களில் பல நூற்றுக்கணக்கானோர் இன்னமும் இவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. இலங்கையில் தமிழர் செறிவாக வாழும் வடக்கு- கிழக்கில் இராணுவமயமாக்கல் தொடர்கிறது. இராணுவத்தால் நில அபகரிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், பயங்கரவாத தடுப்புச்சட்டம் மற்றும் சில சட்டங்களின் கீழ் பல நூற்றுக்கணக்கான இளையோர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் தென்பகுதியில் தனக்கெதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளை தாங்கிக்கொள்ளும் இலங்கை அரசாங்கமானது நாட்டின் வடக்கில் மேற்கொள்ளப்படும் ஜனநாயகசார் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்ளை ஏற்றுக்கொள்ளவில்லை.

2009 மே இலிருந்து தமிழ்ப் பொது மக்கள் இலங்கை அரசை எதிர்த்து எந்தவொரு வன்முறைகளிலும் ஈடுபடாத போதிலும்கூட தமிழ் மக்களை எதிர்ப்பதிலும் அவர்களின் உரிமைகளைப் புறக்கணிப்பதிலும் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் ஈடுபடுகிறது. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக்கூட இலங்கை அரசாங்கம் கண்டுகொள்வதில்லை. அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்குவதில்லை.

1970 வரை தமிழ் மக்களின் சுயமதிப்பு, கௌரவம் போன்றவற்றிற்கு இழுக்கை ஏற்படுத்தும் விதமாக பெரும்பான்மை அதிகார வர்க்கத்தால் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ் மக்கள் உடல் ரீதியான தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்நிலை இன்றுவரை தொடர்கிறது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் வரலாற்றில் நடந்த அதேவிதமான சம்பவம், தற்போது அதாவது 40 ஆண்டுகள் கழிந்த பின்னர் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக தமிழ் இளையோர் இலக்கு வைக்கப்பட்டு தாக்குதலுக்கு உட்படுத்தப்படும் அதேவேளையில், அதிலும் குறிப்பாக, தமிழ் மாணவர் சமூகம் இதில் முதன்மைப் படுத்தப்படுகின்றனர். மீண்டும் 40 வரையான இளையோர்கள் கைது செய்யப்பட்டு எந்தவொரு விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இவர்கள் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சொந்த வேண்டுகோளின் பெயரில் இவர்களுக்கான புனர்வாழ்வுகள் வெலிக்கந்தை இராணுவ முகாமில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாம்பலிலிருந்து மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் எழுவதாக சிறிலங்கா அரசாங்கம் இந்த உலகை நம்பவைக்க முயல்கிறது. இதற்காகவே இவ்வாறான தடுப்புக்கள் சட்டரீதியற்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செய்தியானது புலிகளின் எதிர்ப்பாளர்களுக்கு மகிழ்வை ஏற்படுத்தும் ஆனால், உண்மையில் இங்கு தமிழ் இளையோரினதும் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியே நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மேதின ஆர்ப்பாட்டத்தின்போதும் ஏனைய சில ஆர்ப்பாட்டங்களின்போதும் புலிக்கொடி ஏந்தப்பட்டமையின் ஊடாக, அரசாங்கம் எதனை உருவகப்படுத்த முயற்சித்ததோ அதனை நோக்கி அது நகர்ந்து கொண்டிருக்கிறது.

எது எவ்வாறெனினும் இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு நகர்வுகளும் நாட்டில் பயனுள்ள மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தடையாகவே இருக்கிறது.

*நன்றி:புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி பாலம் அருகே விபத்து; வீதியை விட்டு விலகியது கூலர்



(படம்:- கௌரிகாந்தன்)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கைதடிப் பாலம் அருகே இடம்பெற்ற விபத்தில் கனரக கூலர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகியதால் சேதத்திற்கு உள்ளாகியுள்ளாது.

எனினும் ஆசனப்பட்டி அணிந்திருந்த தன் காரணமாக சாரதி மற்றும் அதில் பயணித்தவர்கள் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பித்துக் கொண்டனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் ஐஸ்கட்டிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த குறித்த வாகனம் பாலத்தின் வழுப்புத்தன்மை காரணமாக வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சில மணி நேரங்களின் பின் அங்கு வந்த வீதிப்போக்குவரத்து பொலிஸார் சம்பவத்தை பதிவு செய்தனர்.

அண்மைக்காலமாக இப்பகுதியில் அதிகம் விபத்துக்கள் இடம்பெறுவது பதிவாகியுள்ளது.

கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதியளவில் கனரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானதுடன் அதனை அண்டிய நாட்களில் இராணுவ ஜீப்ரக வாகனமும் இப்பகுதியில் விபத்துக்குள்ளாகியிருந்தது.

இதேவேளை இவ் வாறான சம்பவங் கள், உருக்கினால் உருவாக்கப்பட்டுள்ள இப் பாலத்தின் தரைப்பகுதியில் மழை காலத்தில் அல்லது வாகன எண்ணெய் கழிவுகளால் வழுப்புத்தன்மை அதிகரித்துள்ள நிலையிலே இவ்வாறான விபத்துக்கள் இடம் பெறுவதாக அவ்விடத்தில் நின்றவர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை வழுக்கும் தன்மையுள்ள பாலம் முன்னால் உண்டு என்பதனை தெரியப்படுத்துவதற்கான வீதிக் குறியீடுகள் எதுவும் குறித்த பகுதியில் காணப்படவில்லை.

எனினும் வீதி அகலிப்பு பணிகளிற்கு முன்னர் இவ் அறிவுறுத்தல் இருந்ததாகவும் வீதி அகலிப்பு பணியின்போது அகற்றப்பட்டு குறித்து அறிவுறுத்தல் மீண்டும் அமைக்கப்படவில்லை எனவும் மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அதி வேகமாக வாகனங்கள் செலுத்தப்படுவதனாலேயே அதிகமான விபத்துக்கள் இடம்பெறுகின்றன எனக் கூறப்படுகின்றபோதும் வேகக் கட்டுப்பாட்டு அறிவுறுத்தல்கள் அமைக்கப்படவில்லையென்பதுடன் அதிகம் விபத்துக்கள் இடம் பெறும் இப் பகுதியில் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவதில்லை என்ற கருத்தும் விபத்துக்கள் குறி த்த பாலத்திலும் பாலத்தை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றபோதும் இது குறித்து எவரும் கரிசனையோடு நடந்து கொள்ளவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நிலவி வருகின்றது.

பல மில்லியன் ரூபா செலவில் இப்பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது. எனினும் வீதி ஓரத் தடுப்பு கட்டைகள் இடப்படாமல் வீதி பாதுகாப்பு குறியீடுகள் எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் இடப்படாமல் பயணிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ள இப்பாலத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பயணிகளால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-5)

## விசேட பொதுக்கூட்டம்

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலையின் எதிர்கால அபிவிருத்திக்கான செயற்பாடுகள் கடந்த கால செயற்பாடுகளின் விளைவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளதுடன் பழைய மாணவர்களின் ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்க தலைவருமான என்.பத்மநாதன் கேட்டுள்ளார். (அ-9-266)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆன்மீக விழா 13 ஆம் திகதி

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் சங்கம் ஏற்பாடு செய்துள்ள அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி ஆன்மீக விழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் பாலாம்பிகை மண்டபத்தில் தமிழ்மாமணி தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது இரா.கௌரிநாதன் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி வைக்கவுள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமன், திருமுறையோத, திருமதி.ப.தனரஞ்சினி, திருமதி ஜெ.சசிரேகா ஆகியோர் தமிழ் வாழ்த்தினை இசைக்க தொடக்கவுரையினை முன்னாள் நகரபிதா எஸ்.என்.ஜி.நாதன் ஆற்றவுள்ளார்.

இதனையடுத்து அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவ வழிபாடும் நினைவுப் பேருரையும் இடம்பெறும். தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லத்தின் பணிப்பாளர் வே.பொ. மாணிக்கவாசகர் **சைவ சமயத்தில் பெண்ணடியார்கள் எனும் தலைப்பிலான உரையாற்றுவார்.**

வவுனியா பிரதேச செயலாளரும் கவிஞருமான அ.சிவபாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்துமதம் நேற்று இன்று நாளை எனும் ஆன்மீக கருத்தரங்கில் கிரியைகள் தொடர்பில் பா.பாலசுந்தரம், சமுதாய தொண்டு தொடர்பில் செ.சிவபாலன், மூட நம்பிக்கை தொடர்பில் கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன், இளைஞருக்காக தொடர்பில் செல்வி ஜெசித்தா ஆனந்தமூர்த்தி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ-9-266)

# மீன்பாடும் தேன்நாட்டை பற்றிக் கொண்டது மழை

சீரற்ற காலநிலையால் மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பித்துள்ளது.

33 அடி உயர உன்னிச்சைகுளம் மீண்டும் நிரம்பி வழிவதால் அதன் கதவுகள் திறக்கப்பட்டு 2 அடி நீர் வெளியேற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

டிசெம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது நீர் நிரம்பாமல் இருந்த ஒரே ஒரு குளமான 14 அடி உயரமான தும்பங்கேணி குளத்தில் தற்போது நீர் நிரம்பியுள்ளது. அங்கு 83 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

தொடரும் மழையினால் மட்டக்களப்பு வாவி கரை புரண்டு ஓடுகிறது. முகத்துவாரம் மற்றும் கோட்டைக் கல்லாறு முகத்துவாரங்கள் வழியாக வெள்ளப் பெருக்கு வங்காள விரிகுடாவை நோக்கி பாய்ந்த வண்ணம் உள்ளது. அண்டல் ஓயா, மூங்கில் ஆறு, சில்லிக்கொடி ஆறு, சந்தனமேடு ஆறு முதலிய ஆறுகளில் வெள்ளம் பீறிட்டுப் பாய்கிறது.

முந்தானை ஆற்றில் நீர் பெருகியுள்ளதாலும் உறுகாமம் குளத்தில் நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் சித்தாண்டி, வந்தாறுமூலை, பலாச்சோலை, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு கலால் திணைக்களம், விவசாயத் திணைக்களம் உட்பட பல திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகிய இடங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் குடலைப் பருவ வேளாண்மை வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# தொழிற்சங்க சம்மேளனம் அமைப்பதற்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களின் கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் அமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தி புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


இது தொடர்பான கலந்துரையாடல் ஏற்கனவே கடந்த மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது.

அதில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட ஆய்வுகளின் பிரகாரமே இக்கூட்டம் அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதாக நடைபெறவுள்ளது.

சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக் குழுவினால் வடமாகாணத்திலுள்ள பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கென நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பாதிப்புக் குறித்து இதில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் சமூக சேவைகள் உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பண்பாட்டு உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோரை உள்ளடக்கியதாக தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேற்குறித்த அனைத்து உத்தியோகத்தர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளதுடன் இது தொடர்பான கடிதங்கள் உரிய அலுவலர்களுக்கு தனித்தனியாக ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். (அ-9)

யாழ்ப்பாணம் அருட்பணி செ.அன்புராசா அடிகளாரின் வெளியீட்டாக உந்தன் நினைவிலே என்னும் கிறிஸ்தவப் பாடல் இறுவெட்டின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு இறுவெட்டின் பிரதிகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு நிதிக்குறைப்பினால் விமானப்படைக்குப் பாதிப்பு

## இந்திய விமானப்படை தளபதி

**இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் 10 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு நிதிக்குறைப்பு செய்யப்படுவது விமானப்படையை நவீனப்படுத்தும் முயற்சியைப் பாதிக்கும் என்று விமானப் படை தலைமைத் தளபதி என்.ஏ.கே.பிரௌன் தெரிவித்துள்ளார்.**

இராஜஸ்தான் மாநிலத்தில் ஜோத்பூர், ஜெய்சல்மர் இடையே பலோடி விமானப்படைத்தளம் அமைந்துள்ளது. இங்கு எம்.ஐ.17 வி5 என்ற மத்திய ரக உலங்குவானூர்திக்கான வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்து செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்திய விமானப் படை பல்வேறு வகைகளிலும் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. தாராள நிதி ஒதுக்கீடும் அதனை முழுமையாகப் பயன்படுத்துவதுமே இதைச் சாத்தியமாக்கும். ஆனால், இராணுவத்துக்கான 1.93 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டில் 5 சதவீதத்தைக் குறைத்து மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

பொருளாதார மந்தநிலை காரணமாக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 126 உலங்குவானூர்திகள் கொள்முதல் செய்யப்படவுள்ள நிலையில் 10 ஆயிரம் கோடி அளவுக்கு நிதிக்குறைப்பு என்பது இராணுவத்தை நவீனமயமாக்குவதைப் பாதிக்கும்.

இது குறித்து மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம். 2022 ஆம் ஆண்டுக்குள் விமானப்படையை முற்றிலும் நவீனமயமாக்க திட்டமிட்டுள்ளோம். ஆனால், இம்முயற்சி நிதிக்குறைப்பு காரணமாக பாதிக்கப்படும் என்றார்.

மேலும் எம்.ஐ.17 வி5 ரக உலங்கு வானூர்தியின் 6 ஆவது பிரிவு கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அசாம் ஹஸிமாரா விமானப்படைத் தளத்தில் விரைவில் தொடங்கப்படும். 59 புதிய உலங்குவானூர்திகள் வாங்க ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது எனவும் பிரௌன் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி 22ஆம் திகதி இரும்புக்கரம் என்ற பெயரிலும் மார்ச் மாதத்தில் லைவ் வயர் என்ற பெயரிலும் விமானப்படை போர்ப்பயிற்சி நடைபெறவுள்ளது. (அ-5)

# வில்லியம் தம்பதியருக்கு பரிசாகிறது அரண்மனை

பிரிட்டனின் இளவரச தம்பதியான வில்லியம்-கேட் மிடில்டனுக்கு அரண்மனையை பரிசாக



வழங்க ராணி எலிசபெத் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டன் அரச குடும்பத்திற்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன. இந்த சொத்துக்கு அதிபதியாக ராணி எலிசபெத் இருக்கிறார்.

இவற்றில் லண்டன் சந்திரிகாம் பண்ணையில் உள்ள அழகிய ஆன்மர் அரங்கை வில்லியம் கேட் மிடில்டனுக்கு பரிசாக வழங்க ராணி எலிசபெத் திட்டமிட்டுள்ளார்.

தங்கள் முதல் வாரிசுக்காக காத்திருக்கும் வில்லியம் தம்பதியருக்கு இது ஒரு நினைவுப் பரிசாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

வில்லியம்-கேட் இருவரும் திருமணத்திற்கு பின்னர் முதலாவது நத்தார் தினத்தை கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஆபத்தில் சிக்கிய பெண்களுக்கு உதவும் வகையில் நவீன காலணி

## மாணவிகளின் கண்டுபிடிப்பு

ஆபத்தில் சிக்கிய பெண்களுக்கு உதவும் வகையில் காலணியுடன் இணைந்த புதிய கருவியை பாடசாலை மாணவிகள் 4 பேர் கண்டறிந்துள்ளனர்.

இவர்களது கண்டுபிடிப்பில் வழக்கமாக பெண்கள் அணியும் காலணியின் அடிப்பாகத்தில் சில சிறு கருவிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

காலணியை தரையில் இரு முறை உதைத்ததும் அதிலுள்ள கருவிகள் 5 வோல்ட் மின்சக்தியுடன் செயற்படத் தொடங்குவதோடு உடனடியாக அப் பெண்ணின் கைப்பை அல்லது பேர்ஸில் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள வயர்லெஸ் எச்சரிக்கை மணி அடிக்கத் தொடங்கும்.

அத்துடன் பதிவு செய்யப்பட்ட சில செல்போன் எண்களுக்கு எஸ்.எம்.எஸ்கள் தானாக அனுப்பப்பட்டுவிடும். இதன் மூலம் அபாய சூழலில் இருக்கும் பெண் உள்ள இடத்தை எளிதாகக் கண்டறிந்து அவரை மீட்க முடியும்.

மேலும் காலணியின் அடிப்பாகத்தில் இணைக்கப்பட்டுள்ள நுண் கருவிகள் செயற்படத் தொடங்கிய பின் எதிராளியை அப்பெண் உதைக்கும்போது காலணியின் அடியில் பொருத்தப்பட்டுள்ள உலோக ஆணியில் இருந்து மின்சாரம் எதிராளியின் மீது பாய்ச்சப்பட்டு அவருக்கு மின்னதிர்ச்சி ஏற்படும்.

இவ் அரிய வகை கண்டுபிடிப்பான இக்காலணி கடந்த மாதம் தாணேவில் நடைபெற்ற மாணவர் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

பாலியல் குற்றங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றமையால் இது போன்ற கருவிகள் பெண்களுக்கு பாதுகாப்பாக இருக்குமென்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (அ-5)

# நடுவானில் விமானத்தின் சக்கரம் கழன்று விழுந்தது

## உயிர் தப்பினார் விமானி

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விமானத்தின் சக்கரம் கழன்று கீழே விழுந்தது. எனினும் அதிர்ஷ்டவசமாக விமானி உயிர் தப்பியுள்ளார்.



அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் உள்ள மங்களூரிலிருந்து ஒரு இருக்கை கொண்ட பயிற்சி விமானம் மெல்பேர்ன் நகரை நோக்கி புறப்பட்டுச் சென்றது.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது இந்த விமானத்தின் சக்கரம் ஒன்று திடீரென கழன்று விழுந்தது.

இதன் காரணமாக மெல்பேர்ன் நகர விமான நிலையத்தில் தரையிறங்க முடியாமல் நான்கு மணி நேரம் வட்டமடித்தது.

எரிபொருள் தீர்ந்து போனதால் வேறு வழியில்லாமல் விமானி புல் தரையில் விமானத்தை இறக்கினார். அதிர்ஷ்டவசமாக அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு இரசாயனமுறையில் ஆண்மைநீக்கம்

## மலேசிய சட்டத்தரணிகள் ஆதரவு

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்வதற்கு மலேசிய சட்டத்தரணிகள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து மலேசிய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் லிம் சீவி கூறுகையில்,

அடிக்கடி பாலியல் குற்றங்களில் ஈடுபடுவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்யும் தண்டனை வழங்கலாம். எனினும் இந்த முறையில் கடுமையான பக்கவிளைவுகள் ஏற்படும் என மருத்துவஆய்வுகள்தெரிவிக்கின்றன.

இருப்பினும் இந்த முறை மூலம் காமவெறியர்களிடம் இருந்தும் மக்களை காக்க முடிவது மட்டுமன்றி குற்றவாளியும் தண்டிக்கப்படுவார். இதற்கு முன்பு குற்றவாளிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை பெற வேண்டும் என்றார்.

அவாம் என்ற பெண்கள் அமைப்பின் தலைவர் ஹோ யோக் லின் கூறுகையில், இந்த தண்டனை மிகவும் கொடூரமானது. இயற்கைக்கு மாறானது..

இதன் மூலம் இத்தகைய குற்றங்களை தடுத்துவிட முடியாது. பெண்கள் சமத்துவம் உரிமைகளை மேம்படுத்துவதன் மூலமே இதுபோன்ற குற்றங்களை வேரோடு அழிக்க முடியும் என்றார்.

அண்மையில் ஆசிய நாடுகளின் முதல் முறையாக தென்கொரியாவில் பாலியல் குற்றவாளி ஒருவருக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்யவும் 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும் ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், போலந்து, அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ஆகிய இடங்களில்பல ஆண்டுகளாக இதுபோன்ற தண்டனை வழங்கப்பட்டு வருவதாக தெரிகிறது. (அ-5)

# அல்கொய்தாவிடமிருந்து மாலிக்கு பாதுகாப்பு

## கனடாவிடம் பேசும் ஆபிரிக்க ஒன்றியம்

அல்கொய்தாவின் அச்சுறுத்தல் அதிகரித்துவிட்டதால் மாலி நாட்டுக்கு உதவி புரியும்படி கனடாவை ஆபிரிக்க ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரை ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவரும் பெனின் நாட்டின் ஜனாதிபதியுமான தோமஸ் போனி யாயி இந்த வாரம் ஒட்டாவில் சந்திக்கவுள்ளார்.

அதன்போது மாலிப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கனேடிய பாதுகாப்பு துறை அமைச்சர் ஆபிரிக்க படைகளுக்கு தங்கள் நாட்டு இராணுவம் பயிற்சி அளிக்க தயார் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதன்படி கனடாவிலிருந்து பல்வேறு உதவிகளை பெற்றுவந்த ஆபிரிக்க நாடுகள் தற்போது இராணுவ உதவியையும் கோரியுள்ளது.

இதுகுறித்து ஹார்ப்பர்பெனின் நாட்டின் மேம்பாட்டுக்காக வணிகத் தொடர்புகளை விரிவுபடுத்த கனடா ஆர்வமாக உள்ளது என்றும் தாமஸ் போனியை சந்திக்க ஆவலோடு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ-5)



சீனாவில் கடும் உறைபனி காலநிலை தற்போது வாட்டி வருகிறது. இதனால் கடல்நீர் பனியாக உறைந்துவிட்டது. சீனாவின் லயோனிங் மாகாணம் ஜினோஹ பகுதியில் உள்ள துறைமுகத்தில் ஆயிரம் கப்பல்கள் தமது பயணங்களை மேற்கொள்ளாமல் தரித்து நிற்பதைப் படத்தில் காணலாம்.

# 4 வயது சிறுமி குளிரூட்டியில்; தந்தை அட்டகாசம்

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த நாராயணபுரத்தில் 4 வயது மகளை கடுமையாகத் தாக்கி குளிரூட்டியில் அடைத்து வைத்த தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாஷா என்ற அவர் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு அவர் மீது இருந்த ஆத்திரத்தில் குழந்தையை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த காயங்களுடன் குளிரூட்டியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை மீட்ட அயலவர்கள் பாஷாவை பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விதவிதமான எண்ணங்களை மேற்கொள்வது தான் பலவீனத்திற்கு காரணமாக அமைகிறது.
- ரவீந்திரநாத் தாகூர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட்டுக்கோட்டையில் ஆசிரியர் இடமாற்ற மாநாடு பிரமதேவர் தலைமையிலான குழு கண்காணிப்பு

சித்திரகுப்தனாரின் கோபாவேச உரையுடன் கண்காணிப்புக்குழுவின் தலைவர் பிரம்மா சபைக்கு ஒரு அறிக்கையை விடுக்கின்றார்.

பிரம்மா : வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை எமது குழு உணர்ந்துள்ளது.

எனினும் வன்னிக்கான இடமாற்றத்தில், சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஆசிரியர்கள் சிறு பிள்ளைகளின் பெற்றோர்களாக இருப்பதும் இளம் குடும்பஸ்தர்களாக இருப்பதும் இடமாற்றத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்குப் பெருந்தடையாக இருக்கின்றதென்பதை தேவலோகத்திலிருந்து வந்திருக்கக் கூடிய இந்தக் குழு உணர்ந்து கொள்கின்றது.

அதேநேரம் வடமாகாணத்தில் இருக்கக் கூடிய ஆசிரியர் சங்கங்கள் ஒன்றுபட்டு வன்னிக்கான இடமாற்றத்தில் சில வரையறைகளை முன்மொழிவுகளாக வழங்குவதும், தங்கள் சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ள இவ்வளவு ஆசிரியர்களை நாங்கள் தருகின்றோம் அவர்களை வன்னிக்கு இடமாற்றம் செய்யுங்கள் எனக் கூறுவதும் இடமாற்ற சிக்கலை வலுவாக குறைக்கும்.

எனவே வடமாகாணத்தில் இயங்குகின்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகிய இரண்டு தொழிற் சங்கங்களும் தமது சங்கத்தில் பிரதிநிதித்துவம் உள்ள ஆசிரியர்களுடன் கதைத்து, அவர்களிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையினரை காலத்திற்கு காலம் வன்னிக்குச் சென்று கடமையாற்றும் ஏற்பாட்டை செய்ய வேண்டும் என இந்தக் குழு கண்டிப்பாக உத்தரவிடுகின்றது.

ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

அதேநேரம் வன்னியில் நீண்டகாலம் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களுக்கான உரிமையென்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

இதற்குபதிலீடாக யாழ்.மாவட்டத்திலிருந்து ஆசிரியர்கள் வன்னிக்குச் செல்லவேண்டும். இது கட்டாயமானதாகும். எனவே இதுவிடயத்தில் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம்.

அதேநேரத்தில் வன்னிபிரதேசத்தை நிரந்தர இடமாகக் கொண்ட ஆசிரியர்களும் வன்னியிலிருந்து வெளியேறும் பொருட்டு இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

தமது சொந்த இடத்திலிருந்து ஆசிரியர்கள் வெளியேறுவார்களேயானால் அது, வன்னிப் பெருநிலப்பரப்பில் கல்வியின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

வன்னிப்பிரதேசத்தை சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்கள் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் மன நிலையில் இருப்பது, வன்னியின் எதிர்காலக் கல்விக்கு ஆபத்தான அடையாளம் என்பதை எனது தலைமையிலான தேவர்குழு எச்சரிக்கைப் படுத்துகின்றது. இதற்கு தீவுப்பகுதி நல்லதோர் உதாரணமாகும். (நாளை தொடரும்)

# கஜேந்திரகுமார் விவகாரத்தில் இந்திய அரசு தலையிட வேண்டும்

## கருணாநிதி அறிக்கை

(சென்னை)

இலங்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு இலங்கை அரசு விடுத்துள்ள பிரச்சினையில் இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடப்பாக தி.மு.க.தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பிரபல வழக்கறிஞரும் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரனுமான கஜேந்திரகுமார் சட்டத்திற்குப் புறம்பாக தீவிரவாதிகளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆதரிப்பதாகக் கூறி அதற்கு விளக்கமளிக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இலங்கைப் புலனாய்வுத்துறை அலுவலகத்திற்கு விசாரணைக்காக ஆஜராகும்படி தகவல் வந்துள்ளதாம். இதிலிருந்து இலங்கை அரசு எப்படியெல்லாம் தமிழர்களை குறிபார்த்து குறுக்கு வழியில் பழி வாங்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த நிலைமைகளையெல்லாம் போக்கவே தி.மு.க.சார்பில் டெசோ மாநாடு நடத்தி உலக நாடுகளின் மற்றும் சர்வதேச அமைப்புகளின் கவனத்தை ஈர்த்திடும்வகையில் அதன் தீர்மானங்களை மத்திய அரசுக்கும் ஐ.நா. மன்றத்திற்கும் நேரடியாகவே வழங்கியிருக்கின்றோம்.

இப்போதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரச்சினையில் இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# கிளி.மாவட்ட தொன்மையை பிரதிபலிக்கும் ஆய்வுக்கட்டுரைகள் கோரப்படுகின்றன

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கப்படவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் நோக்கில் புலமையாளர்களிடமிருந்து ஆய்வுக்கட்டுரைகள் கோரப்படுவதாக கிளி.மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஆய்வுக்கட்டுரைகள், வரலாறு, விவசாயம், வனம், குடியேற்றம், நீர்வளம், நிலவளம், பொருளாதாரம், வாழ்வியல், பண்பாடு, தொல்லியல், மரபுரிமை, இலக்கியம் (நாவல், சிறுகதை, கவிதை, நாடகம்) சமயம், கலை முயற்சிகள் (சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை), நாட்டார் வழக்காற்றியல் (ஊர்ப் பெயர்க் காரணம், மருவிவரும் வழக்காற்றுச் சொற்கள், பாரம்பரிய கூத்துக்கள்) ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக அமையவேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் ஆய்வுக்கட்டுரைகளை 20 வயதுக்கு மேற்பட்ட எவரும் சமர்ப்பிக்கலாம். முற்றுமுழுதாக கிளிநொச்சி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டே அமையவேண்டும்.

கட்டுரையாளர் தனது கட்டுரையை ஆய்வரங்கத்தில் நேரில் சமர்ப்பிக்கக் கூடியதாக இருத்தல்வேண்டும். ஏ-4 தாளில் தட்டச்சு செய்யப்பட் 12 தொடக்கம் 20 பக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் வன் பிரதியாகவும் மென்பிரதியாகவும் ஒப்படைத்தல் வேண்டும்.

கட்டுரைகள் சுயமாக எழுதப்பட வேண்டும். உசாத்துணை நூல்கள் குறிப்பிடவேண்டும்.

எழுதப்படும் கட்டுரைகள் இன முரண்பாட்டுத் தளங்களில் இருந்து விடுபட்டதாக இருத்தல் அவசியமாகும்.

இக்கட்டுரைகளின் கருத்துக்களுக்கு அவரவரே பொறுப்பானவர்களாகக் கருதப்படுவர்.

ஆய்வாளர் தமது சுயவிபரங்கள், ஆய்வுத்தலைப்பு உள்ளடங்கிய விண்ணப்பத்தினை ஆய்வுக்கட்டுரைக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்திலும் அவசியமான திருத்தங்கள் செய்வதையும் ஆய்வரங்கத்தில் சமர்ப்பிப்பதையும் நூலில் வெளியிடுவதையும் ஆய்வுக்குழுவே தீர்மானிக்கும்.

விண்ணபப்படிவங்கள் யாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாகவும் கட்டுரைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாகவோ அல்லது தபால் மூலமாகவோ மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பி வைக்கப்படல்வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள் அனுப்பி வைக்கும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், தொழில், கடமை அலுவலக முகவரி, விண்ணப்பிக்கும் துறை, ஆய்வுத்தலைப்பு ஆகிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன்மேலே கூறப்பட்ட விடயங்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் எனதுசொந்தஆய்வுக்கட்டுரைஎன்றும்வேறு எந்த நூலிலும்பிரசுரம்செய்யப்படவில்லை என்பதனையும் உறுதிசெய்வதுடன் ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பிப்பதற்கும் நூலில்பிரசுரம்செய்வதற்கும்அவசியமான மாற்றங்கள்செய்வதற்கும் ஆய்வுச்செயற்குழு தீர்மானத்தின் பிரகாரம் செயற் படுத்த சம்மதிக்கிறேன் என எழுதிய படிவத்திலே விண்ணப்பதாரி கையொப்பம் இட்டு அனுப்பிவைக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## யா/ மத்திய கல்லூரி
## முன்னாள் அதிபருக்கு உருவப்படம் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக 1917 முதல் 1921 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கடமையாற்றிய காலம் சென்ற வணக்கத் திற்குரிய ஹறோல்ட் புள்ளோயின் உருவப்படம் கல்லூரி றொமைன் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உருவப்படத்தை அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சாந்தகுணநாதன் பிர தம அதிதியாக கலந்து கொண்டு திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

பழைய அதிபர் புள்ளோ, யாழ். மத்திய கல்லூரியில் வணிகக்கல்வி யினை அறிமுகப்படுத்திய பெருமை பெற்றவர். யாழ்.மாவட்ட பாடசாலை களில் யாழ்.மத்திய கல்லூரியில் தான் முதன்முதலாக வணிகக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வுருவப்படத்தினை யாழ். மத்திய கல்லூரி முன்னைநாள் சித்திர ஆசிரியரான கலைமாமணி சிவப்பிரகாசம் ஆக்கம் செய்துள்ளார்.

இவ்வைபவத்தில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (அ)

## அல்லைப்பிட்டி பராசக்திக்கு புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில்புதிய அதிபர்கடந்த 4-ம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

சரவணை சின்னமடு றோ.க.வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய கோபாலு பத்மநாதன் என்பவரே அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்றுள்ளார். (எ-11)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கருணையின் வடிவம் ஸ்ரீராமகிருஷ்ணர்



நாங்கள் அனைவரும் குருதேவரின் குழந்தை கள் என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள விரும்புபவர்களிடம் யோகம், பக்தி, கர்மம், ஞானம் ஆகிய அனைத்தும் இருக்க வேண்டும்.

ஏனென்றால் ஸ்ரீராமகிருஷ்ணர் எல்லா மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உணர்த்துவதற்காகவே வாழ்ந்தார்.

கடந்த காலத்தில் ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட வழியில் சென்றால் மட்டுமே ஆன்மீக முன்னேற்றம் பெறமுடியும் என்ற நியதி இருந்தது.

ஆனால் இப்போது பெருந்தன்மை எதையும் பொறுத்துக்கொள்ளும் மனவலிமையுடன் எல்லா வழிகளிலும் செல்லக்கூடிய ஆன்மீக முன்னேற்றமே ஒருவருக்குத்தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரவரிசைப் பட்டியலில் தோனிக்கு 4ஆம் இடம்

ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தரவரிசையில் இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி 4 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

சமீபத்தில் நடந்து முடிந்த பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் தலைவர் தோனி மட்டுமே சிறப்பாக விளையாடினார். 3 போட்டிகளில் அவர் 203 ஓட்டங்களை எடுத்தார். இதில் ஒரு சதமும் அடங்கும். இதனால் அவர் இரு இடங்கள் முன்னேறி 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் திங்கட்கிழமை வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரவரிசைப் பட்டியலில் முதல் இரு இடங்களையும் தென் ஆபிரிக்க வீரர்கள் பகிர்ந்து கொண்டனர். முதல் இடத்தில் ஆம்லாவும், இரண்டாவது இடத்தில் டிவில்லியர்ஸம் உள்ளனர்.

இந்திய வீரர்களான சுரேஷ் ரெய்னா ஓர் இடம் முன்னேறி 26 ஆவது இடத்தைப் பிடித்தார். யுவராஜ் சிங் 41 ஆவது இடத்தைப் பிடித்தார். தொடர்ந்து தடுமாறி வரும் விராட் கோலிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 824 புள்ளிகளுடன் அவர் 3ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

பாகிஸ்தானின் தொடக்க வீரர் நசீர் ஜம்ஷெட் 14 இடங்கள் முன்னேறி 31ஆவது இடத்தைப் பிடித்தார். இது அவருடைய அதிகபட்ச தரவரிசை இடமாகும்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களான சையீது அஜ்மல் மற்றும் முகமது ஹபீஸ் ஆகியோர் முறையே முதல் இரு இடங்களைப் பிடித்துள்ளனர்.


சகல துறை ஆட்டத்தில் பாகிஸ்தானின் முகமது ஹபீஸ் முதலிடத்துக்கு முன்னேறினார்.

# அக்ரமின் ஆலோசனையே இந்திய அணியை தகர்த்தது

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் பாகிஸ்தான் அணி 2/1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு அந்த அணி வீரர்களின் சிறப்பான பந்து வீச்சு முக்கிய காரணமாகும். குறிப்பாக 23 வயதான வேகப்பந்து வீச்சாளர் ஜுனைத் கான் அபாரமாக பந்து வீசி 8 விக்கெட்டுகளை அள்ளினார்.

ஷேவாக், கம்பீர், யுவராஜ்சிங்கை ஒரு முறை ஆட்டம் இழக்க வைத்த ஜுனைத் கான், விராட்கோக்லியை 3 முறை வீழ்த்தினார். தனது பந்து வீச்சு குறித்து ஜுனைத் கான் கூறுகையில், 'நான் வழக்கமாக நல்ல வேகத்துடன் அவுட் ஸ்விங் பந்து வீசக்கூடியவன். இன் ஸ்விங் பந்து வீச்சை மேம்படுத்தும்படி முன்னாள் பாக். அணித் தலைவர் வாசிம் அக்ரம் எனக்கு ஆலோசனை வழங்கினார்.

அது இந்திய அணிக்கு எதிராக நல்ல ஆயுதமாக இருக்கும் என்று அவர் சொன்ன ஆலோசனை உதவிகரமாக இருந்தது. அவரது ஆலோசனைப்படி நான் இன் ஸ்விங் செய்யும் வகையில் பந்து வீசி அதிக பயிற்சி எடுத்தேன். அந்த கடின பயிற்சி எனக்கு பலன் அளித்தது' என்றார்.



# சர்வதேச டெனிஸ் தரப்படுத்தலில்

## ஆண்கள் பிரிவில் நோவக் ஜோகோவிச்சும், மகளிர் பிரிவில் அசரென்காவும் தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச டெனிஸ் தரவரிசைப் பட்டியலில் ஆண்கள் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும், மகளிர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்காவும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளனர்.

ஆண்கள் தரவரிசையில் ஜோகோவிச் 12, 920 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அவரை விட 2,695 புள்ளிகள் பின் தங்கியுள்ள சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2 ஆம் இடத்தில் உள்ளார்.

பிரிட்டனின் ஆண்டி முர்ரே 8 ஆயிரம் புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் உள்ளார். நான்காவது இடத்துக்கு போட்டி நிலவுகிறது. இப்போது ஸ்பெயினின் ரஃபேல் நடால் 6,600 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் உள்ளார். ஆனால் அவரை விட 95 புள்ளிகளே பின் தங்கியுள்ளார் சக நாட்டு வீரரான டேவிட் ஃபெரர். சென்னை ஓபன் டெனிஸ் போட்டியில் காலிறுதியில் தோல்வியைத் தழுவிய செக் குடியரசின் தாமஸ் பெர்டிச் 6ஆம் இடத்தில் உள்ளார்.

சென்னை ஓபனில் பட்டம் வென்ற சேர்பியாவின் ஜான்கோ டிப்சரேவிச் 9ஆவது இடத்தில் உள்ளார்.

மகளிர் பிரிவில் அசரென்கா 10,595 புள்ளிகள் பெற்று முதலிடத்தில உள்ளார். அசரென்காவை விட 450 புள்ளிகள் பின்தங்கியுள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவா இரண்டாம் இடத்திலும், 845 புள்ளிகள் பின்தங்கியுளள அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

# விளையாட்டுத் துளிகள்

- 'இந்தியா , பாகிஸ்தான் அணிகளிடையே நடந்த ரி20 மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களின்போது, பாக். வீரர்களுக்கு இந்திய ரசிகர்கள் அளித்த ஆதரவு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிற து. அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்' என்று பாக். கிரிக்கெட் வாரியத் தலைவர் ஸகா அஷ்ரப் கூறியுள்ளார்.
- சிட்னி டெஸ்டுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய வீரர் மைக்கல் ஹஸி, ஐசிசி நேற்று வெளியிட்ட டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில் 11ஆவது இடம் பிடித்துள்ளார்.
- பாஷ் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் மே.இ.தீவுவீரர் சாமுவேல்சுடன் மோதலில் ஈடுபட்ட ஷேன் வோர்னுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டதுடன், ரூ.2½ லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

# நான்காவது முறையாக சிறந்த காற்பந்து வீரர் விருதை பெற்றார் மெஸ்சி



பார்சிலோனா காற்பந்து அணி நட்சத்திர வீரர் மெஸ்சி, பிபா சிறந்த வீரர் என்ற விருதினை நான்காவது முறையாக பெற்று புதிய சாதனை படைத்தார்.

கால்பந்து அரங்கில் திறமையாக செயற்படும் வீரர்களுக்கு, பிபா சிறந்த வீரர் என்ற விருது வழங்கப்படுகிறது.

இதன்படி, இதற்கான இறுதிப்பட்டியலில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி, இவரது சக வீரர் இனியஸ்டா. ரியல் மாட்ரிட் அணியின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் இடம்பெற்றனர்.

முடிவில், பார்சிலோனா அணியின் மெஸ்சி இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் தொடர்ந்து நான்காவது முறையாக இவ்விருதினை வென்று சாதனை படைத்துள்ளார். ஏற்கனவே 2009, 10, 11ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளார்.

இந்த விருதுக்கான வீரர்களை தெரிவு செய்ய பயிற்சியாளர்கள் சர்வதேச காற்பந்து அணியின் அணித்தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் வாக்களிப்பர். இதில் மெஸ்சிக்கு 41.60, ரொனால்டோ 23.68. இனியஸ்டா 10.91 சதவீதம் கிடைத்துள்ளன.

இந்த விருது வழங்கும் விழா சுவிற்சர்லாந்தில் உள்ள ஜுரிச் நகரில் நடைபெற்றது.

இது குறித்து மெஸ்சி கூறுகையில்,

இந்த விருதை நான்காவது முறையாக பெறுவதை நினைத்து. வியப்பாக உள்ளது. இதற்காக என் சக வீரர்கள், நண்பர்கள், என் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இதற்கு முன்னர், முன்னாள் பிரெஞ்சு நட்சத்திரம் மைக்கேல் பிளாட்டினி, டச்சு வீரர்கள் ஜோகன் கிரியு மற்றும் மார்கோ வான் பாஸ்டன் ஆகியோர் மூன்று முறை இந்த விருதை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியத் தொடரில் இளைய வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது

**- பயிற்றுவிப்பாளர்**



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு வைத்து இடம்பெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரை 0-3 என்ற கணக்கில் தோற்றிருந்தது.

அத்தோல்விகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கிரஹம் ஃபோர்ட், சில தருணங்களில் இலங்கை அணி அவுஸ்திரேலியா அளவிற்குச் சிறப்பான திறமையை வெளிப்படுத்தியதாகவும், ஆனால் அதைத் தொடர்ச்சியாக, நீண்ட அளவிற்கு வெளிப்படுத்த முடிந்திருக்கவில்லை எனவும், தோல்விக்கான காரணமாகவே அதுவே அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

இத்தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும், சில இளைய வீரர்கள் மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதாகவும், அது தொடர்பாகத் தான் மகிழ்ச்சியடைவதாகவும் கிரஹம் ஃபோர்ட் தெரிவித்தார்.

சில இளைய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், அவ்வீரர்கள் தாங்கள் சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கக்கூடியவர்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்கள் எனவும் தெரிவித்தார் இலங்கையணியின் பயிற்றுவிப்பாளர்.

# ஹர்பஜன் சிங்குக்கு அபராதம்

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் சர்வதேச போட்டியில் வாய்ப்பு கிடைக்காமல் இந்தியாவின் உள்ளூர் தொடரான ரஞ்சி கிண்ணத்தில் ஆடி வருகிறார்.

பஞ்சாப் அணியின் அணித்தலைவரான அவர் ஜார்க்கண்டுக்கெதிரான ஆட்டத்தில் நடுவரின் முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

பிடி ஒன்றுக்கு முறைப்பாடு செய்து அது ஆட்டமில்லை என நடுவரினால் தெரிவிக்கப்பட்டது. இதனால் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஹர்பஜன் சிங்குக்கு அந்த போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

# நியூசிலாந்திற்கு எதிரான தென்னாபிரிக்க அணி

தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான ஒருநாள் சர்வதேச போட்டி தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டி தொடருக்கான தென்னாபிரிக்க அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

**அணி விபரம்:** ஏபி.டி.வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, பர்ஹான் பெஹர்டீன், குயின்டன் டீ கொக், பஃப்டு பிளெஸிஸ், கொலின் இன்க்ராம், ரோறி கிளெய்ன்வெல்ட், றயன் மக்லரன், மோர்னி மோர்கெல், ரொபின் பீற்றர்சன், ஆரோன் ஃபெங்கிசோ, கிரேம் ஸ்மித், டேல் ஸ்ரெய்ன் லொன்வபோ சொற்சொபி.

# ஹொக்கிப் போட்டியிலும் வெற்றி பெறுவோம்

**- பாக்.ஹொக்கி சம்மேளனம்**

இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரைப் போல், இரு நாடுகள் விளையாடவுள்ள ஹொக்கிப் போட்டியிலும் பாகிஸ்தான் வெற்றி பெறும் என்று அந்நாட்டு ஹொக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இரு நாட்டு ஹொக்கி அணிகளுக்கிடையேயான போட்டி வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெற உள்ளது.


இப்போட்டி இந்தியாவில் நடைபெறுகிறது. 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் அணியினர் எதிர்வரும் மார்ச் மாதம் இங்கு வரவுள்ளனர். இதைத் தொடர்ந்து நல்லெண்ண அடிப்படையில் இந்திய அணியும் பாகிஸ்தான் சென்று விளையாட உள்ளது. இந்த சுற்றுப்பயணம் மே மாதம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"கிரிக்கெட் தொடர் வெற்றிகரமாக நடந்த முடிந்தது. இதைத் தொடர்ந்து ஆசியாவின் பலம் வாய்ந்த இரு ஹொக்கி அணிகள் மோதவுள்ள ஹொக்கி தொடரை எதிர்நோக்கி ரசிகர்கள் காத்துள்ளனர்" என்று பாகிஸ்தான் ஹாக்கி சம்மேளன பொதுச் செயலர் ஆசிஃப் பாஜ்வா தெரிவித்தார்.

"போட்டி விவரங்கள் குறித்து மக்கள் இப்போதே கேட்கத் தொடங்கிவிட்டனர். இந்தியாவில் நடைபெறும் ஆட்டத்தைக் காண விசாவுக்கு விண்ணப்பம் செய்யவும் ரசிகர்கள் தயாராகி விட்டனர்" என்று முன்னாள் வீரர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்.கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில்!



(கொழும்பு)

அவுஸ்ரேலிய கடற்படைக் கப்பல் எச்எம் ஏஎஸ் அன்சாக், நேற்று முன்தினம் நல்லிணக்க அடிப்படையில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இதனை இலங்கைக் கடற்படையினர் சம்பிரதாய முறைப்படி வரவேற்றனர்.

இக்கப்பலின் கட்டளை அதிகாரி கொமாண்டர் ஜோன் ஸ்ராவிரிடிஸ், மேற்கு கடற்பிராந்திய கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ரோஹான் அமரசிங்காவை மேற்கு கடற்படைத் தலைமையகத்தில் வைத்து சந்தித்தார். இருவருக்குமிடையே இருதரப்பு விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது.

எச்எம்ஏஎஸ் அன்சாக் ஒரு போர்க் கப்பலாகும். இது கடற்படை ஹெலி கொப்டரை ஏற்றிச் செல்லக்கூடியது.

118 மீற்றர் நீளமுடைய இக்கப்பலில் 29 அதிகாரிகளும் 163 படையினரும் வருகை தந்துள்ளனர். எதிர்வரும்9ம் திகதிவரை இது இலங்கையில் தரித்திருக்கும். இவர்கள் இலங்கையில் தங்கியருக்கும் காலப்பகுதியில் பல விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று இரு ஜப்பானிய கப்பல்களும் கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பட்டதாரிகள் மூலம் ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் சேவையில் உள்வாங்கப்படாத கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் தமது விபரங்களை வட மாகாண கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டபோது அவற்றில் நியமனம் பெறாதோர் மற்றும் நியமனம் பெறத் தவறியோர் பலரும் தமது நிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில் மேற்படி பாடநெறிகளைக் கற்பிப்பதில் வெற்றிடங்கள் நிலவுவது தொடர்பான விடயங்கள் அவருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இவ்விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே மேற்குறிப்பிட்ட பட்டதாரிகள் தமது விபரங்களை இம்மாதம் 18-ம் திகதிக்கு முன்னதாக வட மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

இதேவேளை, ஏனைய திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர்களாகவும் திட்ட அலுவலர்களாகவும் தற்சமயம் கடமையாற்றுவோர் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய ஆசிரிய சேவையில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பினால் அவர்களும் தமது விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங் களை இம்மாதம் 18-ம் திகதிக்கு முன்னதாக வட மாகாண கல்வியமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ)

# மாணவிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கடந்த டிசம்பர் மாதம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுடனான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி எம்.விமலநாதன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் மாணவிகள் அனைவரும் தமது பெற்றோருடன் வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (எ-9)

# உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட ரீதியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் அல்வாய் மனோகரா ஏ அணி கரவெட்டி சுடரொளி அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2-வது போட்டியில் நவிண்டில் கலைமதி அணி கரணவாய் அண்ணா சிலையடி அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குடத்த[illegible]ன சென் பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சமரபாகு[illegible] யூட்டன் அணியும், பிற்பகல் 4:30 மணிக்[illegible] ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நெடிய[illegible]டு இளைஞர் அணி மோதவுள்ளது. (24)

# கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

பொன்னாலை பிரியவதன சமூக முன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி கேயர் நிறுவன அனுசரணையுடன் அழைக்கப்பட்ட 16 கழகங்கள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பொன்னாலை சனசமூக நிலைய மைதானத்தில் சனசமூகத் தலைவர் ப.கோமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் பா.ஜீவன் கலந்து கொள்ளவுள்ளார். (24)

# மரதன் ஓட்டப் போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட செயலகத்தால் நடத்தப்பட்ட பிரதேச செயல்கத்துக்கு [illegible]ட்பட்ட வீரர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு பிரதேசசெயலகத்திலிருந்தும் பத்து வீர, வீராங்கனைகள் இப் போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

அனைத்துப் போட்டியாளர்களையும் உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (24)

# கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலும், யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலும் நடத்தி வந்த மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று புதன்கிழமை இரவு 6 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதன் தலைவர் சி.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணிகளுக்கான வெற்றிக் கேடயங்களை நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.மாவட்ட கரப் பந்தாட்ட சங்கத் தலைவர் கி.மனோகரன் வழங்கி வைப்பார். (3,29)

# ஆலயம் உடைத்து வாகனம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தேதாரவை அம்பாள் ஆலய ரிசப வாகனம் நேற்று முன்தினம் இரவு திருட்டுப் போயுள்ளது.

ஆலயத்தினை உடைத்து ரிசப வாகனம் திருடப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறையிடப்பட்டுள்ளது. (எ)


Alpha Omega International நிறுவனத்திற்கு

பதவி வெற்றிடம்

- மேற்பார்வையாளர் (Supervisor)
- உதவி முகாமையாளர் (Ass.Manager) முகாமையாளர் (Manager)
- அடிப்படைச் சம்பளம்
- மாதமொன்றுக்கு 30,000 க்கு மேல் சம்பாதிப்பு
- பதவி உயர்வின் போது சம்பள உயர்வு
- முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

தகைமை: தொடர்பு கொள்ளும் போது கூறப்படும்.

30 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தங்குமிடம், மருத்துவம் இலவசம்.

தொடர்புகளுக்கு :0217917074, 0770848889, 0772835524

(1438)


# பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகளின் பிரதிகளுக்கான கட்டணம் உயர்வு

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகளின் பிரதிகளுக்கான கட்டணங்களும் ஜனவரி முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகளின் ஒரு பிரதிக்கான கட்டணமாக 100 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பதிவிலக்கம் தெரியாத பிரதிகளைத் தேடுவதற்கு, தேடுதல் கட்டணமாக ஒரு பிரதிக்கு 200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வுகளின் பதிவு பெறும் ஒருவர் அந்த பதிவுக்கான விண்ணப்ப படிவத்தில் அதற்கு பெறுமதியான முத்திரை ஒட்டாமல் அதற்கான பணத்தை பிரதேச செயலகங்களிலுள்ள பதிவுக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# திவிநெகும சட்டமூலம்...

திவிநெகும சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நேற்று செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

சிறுபான்மைக் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியன இந்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன குறித்த சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிறுபான்மை மக்களின் உரிமைகளை மத்திய அரசில் குவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே திவிநெகும சட்ட வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்தோம் என பிரஜைகள் முன்னணியின் செயலாளர் நாயகம் சிறிரங்கா தெரிவித்தார்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை பறித்து மத்தியில் அதிகாரத்தை குவிப்பதற்கும், சிறுபான்மை மக்களின் சிறப்புரிமைகளை இல்லாமல் செய்வதற்குமான சட்டமாக திவிநெகுமவை கருதியதாலேயே வாக்கெடுப்பில் நாங்கள் எதிர்த்து வாக்களித்தோம்.

அதுமட்டுமல்லாமல், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தினால் நிதி கையாள்வதில் வெளிப்படைத்தன்மையில்லை என்ற சபை ஒத்திவைப்பு பிரேரணைக்கும் நாங்கள் ஆதரவு தெரிவித்தோம்.

திவிநெகும சட்ட மூலத்தினால் சிறுபான்மை மக்களுக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்காத பட்சத்தில் அதனை நாங்கள எப்பொழுதும் எதிர்ப்போம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்கா மேலும் கூறினார்.

இதேவேளை, திவிநெகும சட்ட மூலத்தால் அமைச்சுக்கு எல்லையில்லா அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு நிதி நிர்வாகம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையில்லாமல் உள்ளது.

இதனால் இதிலுள்ள பணம் அரசியலுக்கு செலவு செய்யப்படலாம் என்று ஐ.தே.க.எம்.பி சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் தெரிவித்தார்.

திவிநெகும சட்ட மூலத்தில் நிதி நிர்வாகம், கண்காணிப்புத் தொடர்பில் வெளிப்படைத் தன்மையில்லை. இதனால் நாட்டு மக்களின நிதியில் ஊழல் மோசடிகள் இடம்பெறலாம். அதைவிடுத்து ஏழைகளின் பணத்தை தமக்குத் தேவையான விதத்தில் செலவு செய்ய வேண்டாம். இந்தச்சட்ட மூலத்தால் அமைச்சுக்கே அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (எ-11)

# சபாநாயகருக்கு...

நீங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 9-ம் திகதி அளித்த தீர்ப்பில் இதை அங்கீகரித்துள்ளீர்கள்.

அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது,

அரசியலமைப்புக்கு வியாக்கியானம் கூறும் உரிமை உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது. அதைக் குழப்பக்கூடாது. உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் பெரும் மதிப்புடன் ஏற்கப்பட வேண்டும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது. நான் அரசியலமைப்பு விடயத்தில் தீர்ப்பு எதுவும் கொடுக்கலாகாது.

இதனடிப்படையில் சட்டமுறையில் ஒரு சுயாதீனமான அமைப்பு நிறுவப்படாமல்107 (3) உறுப்புரிமைக்கமைய நீதியரசரை பதவி விலக்கும் தீர்மானத்தையும் கருத்தில் எடுக்க முடியாது.

இதை மதிக்காமல் தீர்மானம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமாயின், அது அரசியலமைப்பை மீறுவதாக அமையும். சட்டத்தின் ஆட்சி சீர்குலையும். இந்த நிலைமையில் தற்போது எழுந்துள்ள அரசியலமைப்பு பிரச்சினையை ஆராய கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# ஜனாதிபதியின்...

விழாவும் பிற்போடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கட்டிடம் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை ஜனாதிபதியால் திறந்துவைக்கப்படவிருந்தது. இந்நிகழ்வும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜாவிடம் கட்டிடத் திறப்பு விழா தொடர்பில் கேட்டபோது, ஜனாதிபதியின் விஜயம் ரத்தானமை தொடர்பில் தனக்கு எந்தத் தகவல்களும் அனுப்பப்படவில்லை என நேற்று மாலை தெரிவித்தார்.

இதனைவிட கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கு கொள்வார் எனவும் முன்பு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனாதிபதியின் யாழ்.விஜயம் திடீரென இரத்து செய்யப்பட்டதற்கான காரணம் சீரற்ற காலநிலை எனக் கூறப்படுகின்றது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு புகுந்து தாக்குதல் ஒருவர் படுகாயம்

புத்தூரில் இனம்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த ஒருவர் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இனம் தெரியாத நபர்கள் அவரது வீட்டிற்குள் புகுந்தே நேற்றிரவு 8.45 மணியளவில் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த குறித்த நபர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் சதீஸ்குமார் என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## கல்வித் துறையில் அதிக லஞ்சம்

இலங்கையில் லஞ்சம் பெறுவது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் அதில் கல்வித்துறையிலே அதிக முறைப்பாடுகள் காணப்படுவதாகவும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 2012-ம் ஆண்டில் லஞ்ச ஊழல் தொடர்பாக 3163 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி ஜயவிக்கிரம தெரிவித்தார்.

2011-ம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2012-ம் ஆண்டில் லஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகமாகவுள்ளது.

2012ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் 440 முறைப்பாடுகள் கல்வித்துறை தொடர்பாகவும், 318 முறைப்பாடுகள் பொலிஸ்துறை தொடர்பாகவும், கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை 2012 ஆண்டு லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட 147 தேடுதல் நடவடிக்கையின்போது 77 தேடுதல்கள் வெற்றியளித்துள்ளன. 95 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 20 பேர் பொலிஸார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பல்கலைக்கழகம் மீள...

பல இழுபறிகளுக்கு மத்தியில் எதிர்பார்ப்புகளுடன் நேற்றைய தினம் யாழ். பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது.

விரிவுரையாளர்கள் அனைவரும் விரிவுரைகளுக்கு சென்ற போதிலும் குறைந்தளவிலான மாணவர்களே சமுகமளித்திருந்தமையால் விரிவுரைகள் எவையும் இடம் பெறவில்லை.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிக்கக் கோரி 40 நாட்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வகுப்பு பகிஷ்கரிப்பு நேற்றைய தினமும் தொடர்ந்தது போன்று பல்கலைக்கழகம் மாணவர் வரவின்மையால் வெறிச்சோடிக் காணப்பட்டது.

மாணவர்கள் வரவின்மை தொடர்பில் பீடாதிபதிகள் சிலரிடமும் விரிவுரையாளர்கள் சிலரிடமும் கேட்டபோது,

நேற்று முன்தினமே பல்கலை ஆரம்பிக்கப்படும் என்ற முடிபு எடுக்கப்பட்டமையால் குறித்த முடிபு மாணவர்களுக்குச் சரியான முறையில் சென்றிருக்க வாய்ப்பில்லை.

விடுதிகளில் தங்கியிருந்த பெரும் எண்ணிக்கையான வெளிமாவட்ட மாணவர்களும் தமது இடங்களுக்கு சென்றுள்ளதால் அவர்கள் உடனடியாக வரமுடியாது.

இது தவிர காலநிலையின் சீற்றமும் அதிகமாக காணப்படுவதால் மாணவர்களின் வருகைகுறைவாகவே காணப்படுகிறது.

எனினும் இவ்வாரத்திற்குள் மாணவர்கள் வரவில் மாற்றங்கள் ஏற்பட்டு விடும் எனவும் வழமையான பல்கலைச் செயற்பாடுகள் ஆரம்ப மாகும் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, 16-ம் திகதியன்று ஒரு சில பீடங்களில் பரீட்சை ஆரம்பமாகவுள்ளதால் அதற்கு முன்னதாக அல்லது பரீட்சையோடு விரிவுரைகளினை ஆரம்பிக்கவேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் மாணவர்களின் முடிபே எமது முடிபு எனவும் அவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளித்தால் தாம் விரிவுரைகளை நடத்த தயார் என விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

இவை தொடர்பில் மாணவப் பிரதிநிதிகளும் யாழ். பல்கலை ஆசிரியர் சங்கமும் கருத்துக்கள் எதையும் வெளியிடவில்லை. (எ-4)

## அவசர கூட்டத்...

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (எ-11)

## 5 வான் கதவுகள்...

நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன் அறிவித்துள்ளார்.

இதனால் தாழ்நிலப் பகுதி மக்கள் அவ தானத்துடன் இருக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

நேற்று மாலை 4 மணி நிலைவரப்படி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 31 அடி 4 அங்குலமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் நீர் வரத்தும் அதிகமாகக் காணப்பட்டதால் 5 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

தற்போது பெய்து வரும் கடும் மழையால் சென்கனுக்கு 3 ஆயிரத்து 664 கனஅடி தண் ணீர் உள்வர ஆரம்பித்துள்ள அதேவேளை, 639 கனஅடி நீர் வெளியேறுகின்றது.

மழை மேலும் தொடர்ந்தால் நீர்மட்டம் அதிகரித்து மேலும் சில வான் கதவுகள் திறக்கப்படக் கூடும்.எனவே தாழ்நிலப் பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுள்ளார். (எ)


### 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராமநாதன் கனகநாதன்

அன்பின் வடிவம் அப்பா
அமைதியின் சொரூபம் அப்பா
எங்கள் உயிரோடு கலந்தாய் அப்பா
எங்கள் நினைவில் மலர்ந்தாய் அப்பா
ஆல மரமாய் நிழல் தந்த அப்பா
கண்ணின் கருவியாயிருந்த அப்பா
நீலவானிலே விண்மீனாய் ஒளிக்கின்ற
செல்ல மகனைத் தேடி
சென்று விட்டாய் அப்பா
ஓர் ஆண்டு சென்றாலும் எங்கள்
வாழ்க்கையில் உங்கள் ஒளியால்
வழி காட்டுங்கள் அப்பா
உங்களுக்கு எங்கள் கண்ணீரை
காணிக்கையாக்கின்றோம்.

குடும்பத்தினர்

(சி-2083)

### ABI BABY MART



மழலைகளுக்கான புதிய வகை உடைகள், விளையாட்டுப் பொருட்கள், தரமான பாங்கொக்கில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள், 100% Cotton உடைகள் மற்றும் சிறுவர்களுக்கான



சகல விதமான பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள எங்கள் ABI BABY MART இற்கு ஒருமுறை வந்து பாருங்கள்.

(C-2072)

Brown Road, Jaffna.
075 051 9482

### றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை [இலங்கை வங்கி அருகாமை]

A/L 2015

ஆரம்பம்: ஜனவரி 10 மாலை 3.00 மணி

வர்த்தகப்பிரிவு

- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு

- தமிழ் – பத்மநாதன்
- புவியியல் – பாபு
- இந்துநாகரிகம் – ப்ரீஸ்
- நாட..அரங்கியலும் – றமேஸ்
- அளவையியல் – E.S.பவன்
- அரசியல் – சுகாஷ்
- வரலாறு – R.S.சந்திரன்
- ஆங்கிலம் – மவுலி

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச நிறுவனமாகிய Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடு களுக்கு செல்வோர். மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள். மேலும் தரமான Certificate ஐ பெற்றுக்கொள்ளலாம்.

வகுப்புகள் : சனி, ஞாயிறுகளில்

உங்கள் அனுமதிக்கு முந்துங்கள். அழையுங்கள் : 021 222 8093

61, Kachcheri - Nallur Road, Jaffna.
E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

### வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ்.பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம்

GAQ, B.A - 1, B.A - 11

துறைசார்ந்த நிபுணர்களால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.

ஆரம்பம்: 14.01.2013 பி.ப. 3 மணி

ஸ்ரார் கல்வி நிலையம்

சுன்னாகம்.

(1440)

### Deutsch, Dutch, French, English

2013 புதிய வகுப்புகள் விபரம்

ஜேர்மன் – டொச், நெதர்லாந்து – டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் 12, 13/01/2013 சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பமாகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி.
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464

### காணி விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைக்குப் போகும் றோட்டில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 011-4949234

(1425)

### வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



தைத்திருநாளை முன்னிட்டு 15 வருட கால அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 720 /= Germany 740 /= France 815 /= Denmark 775 /= Netherland 825 /=
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
International Courier & Cargo Service


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.